# பாதுகாவலன்

PATHUKAVALAN



**விளம்பரங்கள்**

பாதுகாவலன் பத்திரிகையிற் சேவை நோக்குடன் மேற்கொள்ளப்படும் விளம்பரங்களுக்கு, ஒற்றைக் கலம் ஒரு சென்ரி மீற்றருக்கு ரூபா 7-50 வீதமும், ஆலய விழாக்கள், மரண ஞாபகங்களுக்கு ஒற்றைக் கலம் ஒரு சென்ரி மீற்றருக்கு ரூபா 15/-வீதமும் அறவிடப்படுகின்றது. விளம்பரங்கள் இரண்டு வாரங்களுக்கு முன் எம்மிடம் சேர்ப்பிக்கப்பட வேண்டும். ஆ. ர்.



மலர் 113 இதழ் 37 16–10–1987 (ஒக்டோபர்12–ஒக்டோபர்18) பிரதி ரூபா 1-00 இலங்கையின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு


### கட்டுப்பாடற்ற இராணுவத்தால், ஆயிரக்கணக்கான தமிழர்களின் உயிர்கள் பறிபோயின.

# கலாசார, மொழியுரிமையைப் பாதுகாப்போம்

**கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியின் கல்வி ஆண்டு ஆரம்ப தின உரையில், அதன் அதிபர் பிதா S. J. இம்மானுவேல் "தேசிய ஒருமைப்பாட்டைப் பற்றி மட்டும் பேசுவதை விடுத்து, இனரீதியான அடக்கு முறைகளையும், பாரபட்சங்களையும் உணர்ந்துகொள்ளவேண்டும்" என்று தமிழ் இனத்தின் தனித்துவ உரிமை மறுப்புக்களைச் சுட்டிக் காட்டினார்.**

இம்மாதம் 1ஆம் திகதி, மறைபரப்பு நாடுகளின் பாதுகாவலி குழந்தை யேசுவின் புனித திரேசம்மாள் விழாவன்று கொழும்புத்துறைப் புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி 1987—1988 கல்வியாண்டுக்காக ஆரம்பிக்கப்பட்டபோது, யாழ். மறைவட்ட முதல்வரும், மறைவட்டப் பரிபாலகருமான அருள் திரு S. A. மைக்கல்சாமி அ. ம. தி. தலைமையில் திருப்பலியும், ஆரம்ப உரைகளும் இடம் பெற்றன.

குருமட அதிபர் அருள்திரு S. J. இம்மானுவேல் அடிகளாரின் உரை வாசிக்கப்பட்டது.

அதிபர் தம் உரையில், தாம் ஆயர் பேரவைக்கு உதவி புரிய அழைக்கப்பட்டமை குருமடத்துக்கே பெருமை தருகிறது எனக் குறிப்பிட்டார்.

மெய்யியல் துறையைக் கலாசார, சமூகச் சூழலில் அமைப்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட இக்குருமடம் 1983இல் ஆரம்பமான இனக்கலவரத்தின் காரணமாகப் பூரணமான இறையியற் கல்வியையும் கற்பிக்கும் குருமடமாக மாறியமையையும் சுட்டிக்காட்டினார்.

"இந்தியா இனப்பிரச்சினையில் தலையிட்டதால், நாட்டு நிலைமை வழமைக்குத் திரும்பும் சாத்தியக் கூறுகள் தென்படுகின்றன. கடந்த கால நிகழ்வுகள் மேலெழுந்த வாரியாக நோக்கப்பட வேண்டியவையல்ல. நாம் நடைமுறைச் சாத்தியமற்ற முறையில், தேசிய ஒருமைப் பாட்டைப் பற்றியும் திருச்சபையின் ஒருமைப்பாட்டைப்பற்றியும் பெருமையோடு பேசுவதை விட்டு, இனரீதியான அடக்கு முறைகளையும், பாரபட்சங்களையும் உணரவேண்டும். ஒன்றுபட்ட திருச்சபையில் ஒற்றுமையாக வாழ்வதோடு, இனிவரும் காலத்தில் எம் கலாசார மொழியுரிமையையும் பாதுகாப்போம். அநீதியான சட்டங்களாலும் கட்டுப்பாடற்ற இராணுவத்தாலும் ஆயிரக்கணக்கான தமிழர்களின் உயிர்கள் பலியாயின. அவற்றிற்குத் துணைபோய்த் திருச்சபை வாயடைத்து நிற்கமுடியாது" என்றும் குறிப்பிட்டார்

யாழ்- ஆயரின் உரை, மறைவட்டப் பரிபாலகரால் வாசிக்கப்பட்டது. வந்தனைக்குரிய யோசவ் வாஸ் முனிவரின் மூன்றாவது நூற்றாண்டிற் குருமடமாணவர்கள் அவரது தியாக சேவையை மனத்திற் கொண்டு அத்தகைய பணிக்குத் தம்மைத் தயார்ப்படுத்த வேண்டுமென்று ஆயர்கேட்டுக் கொண்டார்.

சிறப்பு விரிவுரை, அருள்திரு டேமியன் அ. ம. தி. அவர்களால் வழங்கப்பட்டது.

## பாடசாலை அதிபர் தாக்கப்பட்டார்

ரஞ்சிக் கருகிலுள்ள ஹர்மு என்னுமிடத்திற் பிரான்சிஸ்கன் மூன்றாம் சபையினரால் நடத்தப்பட்டுவந்த புனித பிரான்ஸிஸ் பாடசாலையின் அதிபரான பிதா ஜோண் சிலரால் தாக்கப்பட்டதையடுத்து அப்பாடசாலை மூடப்பட்டது.

இது குறித்துக் கூறப்படுவது யாதெனில், ஒரு வைத்தியர் தனது பிள்ளையைப் பாடசாலையிற் சேர்க்கும்படியாக அதிபரைச் சந்தித்தார். பாடசாலையில் எவரையும் அப்போது சேர்க்க முடியாதென அதிபர் கூறியதைத் தொடர்ந்து அவ்வைத்தியர் அவரை அச்சுறுத்திவிட்டு வெளியேறிய பின் அவரது கையாள்கள் சிலர் பாடசாலையினுட் புகுந்து அதிபரைத் தாக்கியதுடன் பொருள்களை நாசப்படுத்திவிட்டும் சென்றனர். மேலும் அவர்கள் அச்சுறுத்திவிட்டுச் சென்றதாற் பாடசாலை காலவரையறையின்றி மூடப்பட்டது.

பொலிஸில் முறைப்பாடு கொடுக்கப்பட்டு, வைத்தியர் கைது செய்யப்பட்டார்.

இதைத்தொடர்ந்து, சோட்டனுச்பூர் சிறுபான்மை ஆசிரியர் சங்கம் இச்செயலைக் கண்டித்ததுடன் ஆசிரியருக்கும் மாணவருக்கும் பாதுகாப்பு வேண்டி உதவி ஆணையாளரிடம் ஒரு மகஜர் சமர்ப்பித்தது.

## பசாசைப்பற்றிக் கலாநிதிகள் விவாதம்

யேசுசபையைச் சேர்ந்த கலாநிதிகளான பிதா அந்தோனி டி கொஸ்தா, பிதா பிரான்ஸிஸ் பெரெய்ரா ஆகியோர் சுவார்த்தா என்னும் மராத்தி மாத ஏட்டில் பசாசைப்பற்றி மாறுபாடான கருத்துக்களை வெளியிட்டனர். இவர்கள் இருவரும் குரு மடங்களிற் கற்பிக்கும் ஆசிரியர்களாவர். பிதா பெரெய்ரா "தீய ஆவிகள் இருக்கின்றனவா?" என்னும் தலைப்பில் ஒரு கட்டுரை வெளியிட்டிருந்தார்.

பிதா கொஸ்தாவின் கூற்றுப்படி இக்கட்டுரை பல மக்களின் மனதிற் குழப்பத்தை உண்டாக்கியிருக்கிறது. இளமை தொட்டே மனிதனைப் பாவத்தில் விழுத்துவன உலகம், சரீரம், பசாசு என இவர்கள் படித்திருக்கின்றனர். கத்தோலிக்கத் திருச்சபையின் போதனை மட்டுமல்லாது வேதாகம வசனங்களும் எடுத்தாளப்பட்டன.

தீய ஆவிகளும் சாத்தானும் இல்லை என்பதற்கு நியாயம் காட்ட முற்பட்டால், அது இறைவனும், தேவதூதர்களும் இருக்கின்றனர் என்பதுபற்றியும் சந்தேகத்தை எழுப்பிவிடாதா என ஒரு வாசகர் கேட்டிருக்கிறார்.

## கருதினல் லூர்துசாமி ஒருமைப்பாட்டை வற்புறுத்துகிறார்.

கீழைத் திருச்சபைகளுக்கான பேராயத்தின் மேலாளர் கருதினல் சைமன் லூர்துசாமி உலக சமாதானத்தை நிலைநாட்டுவதற்கு இன மத பேதமின்றிச் சகல மக்களும் ஒன்றுபடுவது அவசியமென்பதை வலியுறுத்தினார். டாக்டர் ராதா கிருஷ்ணனின் கூற்றை எடுத்தாண்ட அவர் "ஒருமைப்பாட்டின் தத்துவம் தர்மம். பிளவின் தத்துவம் அதர்மம் ஆகவே, தர்மத்தையே செய்யுங்கள்" என்றார்.

கருதினல் லூர்துசாமி கேரளத்துக்கு வருகை தந்த போது கொச்சின் நகரசபை அளித்த வரவேற்பொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அக் கூட்டத்தின் போது கேரள கவர்ணர் திரு. பி. இராமச்சந்திரன், கருதினலவர்களும் சீரோ மலபார் திருச்சபையும் ஆற்றிய சேவைகளைப் பெரிதும் பாராட்டினார்.

மாவட்டக் கலெக்டரும் மேயருமான கே. ஆர். ராஜன் பேசுகையில் "கிறிஸ்தவர்கள் கலாசார, சமூக, பொருளாதாரத்துறைகளில் இந்நகருக்குப் பெரும்பணி ஆற்றியிருக்கிறார்கள். பல நூற்றாண்டுகளாகப் பல்வேறு மதத்தினரும் ஒற்றுமையாக வாழ்ந்த இந்நகரிற் கிறிஸ்தவ சமூகத்தினர் பல நற்பணிகள் புரிந்துள்ளமையை இச்சந்தர்ப்பத்தில் எடுத்துக் கூற விரும்புகிறேன்" என்றார்.

## மருத்துவப் பணியிற் குருவின் மரணம்

ராய்ப்பூர் தொழு நோயாளர் புனர்வாழ்வு நிலையத்திற் கடந்த 26 ஆண்டுகளாகப் பணிபுரிந்துவந்த பிதா ஆதாம் வில்நீயூஸ்கி என்னும் போலந்துக் குருவானவர் தமது 74வது வயதில் நுரையீரற் புற்று நோய் காரணமாகக் காலமானார்.

பிதா டேமியனின் வாழ்க்கையைப் பின்பற்றும் ஆர்வத்துடன் இந்தியாவுக்கு வந்த இவர், மத்திய பிரதேசத்திலுள்ள அபான்பூர் என்னுமிடத்தில், ஜீவோதயம் என்னும் தொழு நோயாளர் புனர்வாழ்வு நிலையத்தைத் தாபித்தார்.

இவரது இறுதிச் சடங்கிற் பல்வேறு தொழு நோயாளர் நிலையங்களைச் சேர்ந்த பலரும் குருக்கள் அறுபதின்மரும் நூற்றுக் கணக்கான துறவிகள் பொது நிலையினரும் சமுகமாயிருந்தனர்.

இவரது இரங்கல் திருப்பலியில் உரையாற்றிய ஆயர் எக்கா, "குருக்கள் இலௌகிகத் துறைகளிற் கல்வி பெறுவது அனுமதிக்கப்படாதிருந்த காலத்திலேயே பிதா விஸ்நியூஸ்கி தொழு நோயாளருக்குப் பணிபுரிவதற்கான மருத்துவம் பயின்றார்" எனக் கூறினார்.

**18—10—1987**

**மறை அறிவிப்பு ஞாயிறு**

ஞாயிறு திருப்பலிக் காணிக்கை மறை பரப்புப் பணிக்காகப் பயன்படுத்தப்படும்.

## தர்மபுரத்தில் அருள் மழை.

பரந்தன் பங்கு, தர்மபுரம் கிராமத்திற் கோயிற் கொண்டுள்ள, புனித பிரான்சிஸ்கு சவேரியாரின் திருநாளைத் தர்மபுரம், பெரியகுளம், பிரமந்தன் ஆறு, விஸ்வமடு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த கிறிஸ்தவ மக்கள் ஒன்று கூடி 18-9-87 அன்று கொண்டாடினர். நீண்ட காலம் வரட்சியால் வாடிய இப்பகுதிக்குத் திருநாளன்று மழை பொழிந்ததை இறைவன் மட்டில் தமக்குள்ள வல்லமையையும், மக்கள் மட்டிலுள்ள தம் கரிசனையையும் புனித சவேரியார் வெளிப்படுத்திய செயலாக மக்கள் கருதினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


**கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண்**

# மறை அறிவிப்புத் தினம் 18-10-1987 திருத்தந்தையின் செய்தி



அன்புக்குரிய சகோதர சகோதரிகளே,

## 1. பொதுநிலையினரின் மறைப்பணி பற்றிய மன்றம்.

''நீங்களோ தேர்ந்தெடுக்கப்பட்ட இனம், அரசு குருத்துவத் திருக்கூட்டம், பரிசுத்த குலம், இறைவனுக்குச் சொந்தமான மக்கள்; உங்களை இருளினின்று தம் வியத்தகு ஒளிக்கு அழைத்த இறைவனின் புகழ்ச்சிகளை அறிவிப்பது உங்கள் பணி'' (1 இரா. 2: 9)

பொதுநிலையினர், அப்போஸ்தலர்களின் தலைவரான இராயப்பர் விபரித்த, இத்தெரிந்து கொள்ளப்பட்ட மக்களின் பூரண வளர்ச்சியடைந்த அங்கத்தவராவர். அடுத்த ஒக்டோபர் மாதம் நடைபெறவிருக்கும் ஆயர் மன்றத்தின் பொதுச்சபை, பொதுநிலையினரைப் பற்றியே ஆராய இருக்கின்றது. அம்மாதம்தான் திருச்சபை உலகிலுள்ள மறைப்பணித் தளங்களுக்காகச் செபிப்பதிலும், சிந்திப்பதிலும், துணைபுரிவதிலும் ஈடுபட்டிருக்கும் மாதமுமாகும்.

இவை இரண்டும் ஒரே நேரத்தில் நிகழ்வது மகிழ்ச்சிக்குரியது. எனவே, இறை மக்களிடையே தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதியினரான எண்ணற்ற பொதுநிலை விசுவாசிகளுக்கு எல்லா வயதினரும் எல்லா நிலையினரும் ஆண் பெண் இருபாலாருமாகிய பொதுநிலையினருக்கு இச்செய்தியை அர்ப்பணிக்க விரும்புகிறேன். மறைப்பணி புரிவதையே தன் இயல்பாகக் கொண்ட ஒரு குலத்தின் உறுப்பினர் தாங்கள் என்ற புத்துணர்வை அவர்களுக்கு ஏற்படுத்தும்படியாக அவர்களுக்கு இதை அர்ப்பணிக்க விரும்புகிறேன். உண்மையில் திருச்சபை நற்செய்தி பரப்புவதற்காகவே உள்ளது. அதாவது, போதிப்பதற்கும், படிப்பதற்கும், அருட்கொடையின் வாய்க்காலாக விளங்குவதற்கும், பாவிகளை இறைவனுடன் ஒப்புரவாக்குவதற்குமே அஃது உள்ளது. திருத்தந்தை ஆறும் சின்னப்பர் கூறிய இந்த வார்த்தைகளை நான் 1982இல் மீண்டும் நினைவூட்டியுள்ளேன். ஆகவே, நற்செய்தி பரப்புதலும் மறைப்பணியும் ஒருவரின் விருப்பத்திற்கு விடப்பட்டதோ, குறையை நிறைவுபடுத்துவதோ, தேவைக்கு மேற்பட்டதோ அல்ல. திருச்சபை பிறந்தது மறைப்பணிக்காகவே. ஆகவே, நற்செய்தி அறிவிப்பது அதன் வாழ்வின் விதியாகும்.

போதிய திறனும் சிறப்புப் பண்புகளும் பெற்று மறைபரப்புப்பணி புரியத் தயாராய் இருக்கும் குருக்களும் துறவியர்களும் பொதுநிலையினரும் அவர்கள் வெளிநாட்டவராயினும் சரி, உள்நாட்டவராயினும் சரி—ஒரு சிறப்பான அழைத்தல் கொண்டுள்ளனர். இவர்களை அழைக்கும் பணிக்காக நற்செய்தியின் ஊழியர்களாக இவர்கள் பிரித்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். (திருச்சபையின் மறைபரப்புப் பணி 23). ஆம், கிறிஸ்துவின் சீடர்களாகவும் சாட்சிகளாகவும், கிறிஸ்தவ சமூகத்தைக் கட்டியெழுப்புவோராகவும்விளங்கி, நற்செய்தி மதிப்பீடுகளால் உலகை நிலைமாற்றம் செய்யும் முதிர்ச்சியுள்ள பொதுநிலையினர் திருச்சபைக்கு இன்று தேவைப்படுகின்றனர்.

ஏற்கனவே, திருச்சபையின் மறைபரப்புப் பணியில் ஈடுபட்டுள்ள சகல பொதுநிலையினருக்கும் நன்றிகூறி, அவர்களை ஊக்குவித்து, அவரவர் பணியில் அவர்களை உறுதிப்படுத்த விரும்புகிறேன்,

## 2. ஞானஸ்நான அழைப்பு மறைப்பணிக்கு அழைப்பு.

கைவிட முடியாத இந்த மெய்க்கோளிலிருந்து ஒரு கேள்வி எழுகின்றது. மறைப்பணியை ஏற்கவேண்டிய கடப்பாடு யாருக்கு உண்டு? இரண்டாம் வத்திக்கான் சங்கம் இதற்கு விடையிறுக்கின்றது. ''எல்லா விசுவாசிகளும் வாழும் கிறிஸ்துவின் உறுப்பினர் என்ற முறையில் அவருடைய உடல் வளர்ந்து விரிவடையும், எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில் அது முழுமை பெறவும் ஒன்று சேர்ந்து உழைக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். எனவே, திருச்சபையின் பிள்ளைகள் எல்லாரும் உலகின்பால் தாங்கள் கொண்டுள்ள பொறுப்பைப்பற்றிய உயிருள்ள உணர்வைப் பெற்றிருக்க வேண்டும்.'' (திருச்சபையின் மறைபரப்புப்பணி—36).

நற்செய்தி அறிவிக்கும் பணி திரு ஆட்சியாளருக்கு மட்டுமே உரியதொன்றன்று. ''தன்னால் இயன்ற அளவு விசுவாசத்தைப் பரப்புவது கிறிஸ்துவின் ஒவ்வொரு சீடனுக்கும் உரித்தான கடமை'' (திருச்சபை 17), இக்கடமையின் ஆதாரம் விசுவாசத்தின் முதற்திருவருட்சாதனத்திலேயே உள்ளது. எனவே, சகல பொதுநிலைக் கிறிஸ்தவர்களும் தமது ஞானஸ்நானத்தின் காரணத்தினுற் பயனுள்ள அப்போஸ்தலத்துவத்துக்கு இறைவனால் அழைக்கப்பட்டுள்ளனர். ''ஏனெனில், இயல்பாகவே கிறிஸ்தவ அழைப்பு, அப்போஸ்தலத்துவத்திற்கும் உரிய அழைப்பாய் உள்ளது'' (பொதுநிலையினரின் அப்போஸ்தலத்துவம்—2) இது ஞானஸ்நான அருளையே அடித்தளமாகக் கொண்ட ஓர் அழைப்பாகும். கிறிஸ்தவர்கள் ஞானஸ்நானத்தின் வழியாகக் கிறிஸ்துவின் திருவுடலில் இணைக்கப்பட்டு அவரது குருத்துவ, அரச, தீர்க்கதரிசன அலுவலிற் பங்கு கொள்கிறார்கள். உறுதிப்பூசுதல் வழியாகப் பரிசுத்த ஆவியின் ஆற்றல் அவர்களை வலுப்படுத்துகின்றது. அப்போஸ்தலத்துவம் முழுவதற்கும் உயிர் போல இருக்கும் இறையன்பும், பிறரன்பும் நற்கருணை வழியாக வழங்கப்பட்டு ஊட்டமளிக்கப் படுகிறது. (திருச்சபை 33, பொதுநிலையினரின் அப்போஸ்தலத்துவம் 3)

நான் மீண்டும் பொதுநிலையினர்க்கு விடுக்கும் அழைப்பு இதிலிருந்தே பிறக்கின்றது. இதனால், ஆண்டவரின் சீடர் என்ற தமது தொடக்க நிலையின் மகத்துவத்தை மீண்டும் கண்டுணர்ந்து, தமது அப்போஸ்தல உணர்வை ஆழமாக்குவதுடன், நற்செய்திப் பணிக்கு ஒரு தாராளமான பங்களிப்பை அவர்கள் கொடுக்க முடியும்.

## 3. ஒன்றித்த ஒழுங்கமைவுள்ள ஒரு குழுமம்.

ஆனால், திருச்சபையிலுள்ள எல்லோரும் மறைப்பணிக்குப் பொறுப்பானவர்களாயின், அனைவரும் ஒரே சமயத்தில் ஆளப்படுவோராகவும் நன்மை பெறுவோராகவும் இருக்கிறார்களெனின், இஃது ஒரே தலைப்பிலும் ஒரே விதத்திலும் நிகழ்வதன்று. திருச்சபையில் அவர்களது தனித்துவமான நிலை, செய்கடமை ஆகியவற்றைப் பொறுத்தும், அவர்களுக்கு அளிக்கப்பட்ட பணி, அருங்கொடை ஆகியவற்றைப் பொறுத்தும் நிகழ்வதாகும். இறைவனின் கொடைகள் பல திறப்பட்டவை, ஆனால், ஏராளமானவை; ஒரு சிலருக்கே உரியனவல்ல, ஒன்றை ஒன்று நிறைவுசெய்பவை; ஒரே ஆன்மீகக் கூட்டுறவையும் ஒரே மறைப்பணியையும் சார்ந்தவை. அவற்றைப் பகுத்துணர்ந்து நற்செய்தியின் ஞானத்தோடு, எமது காலத்திற் காணப்படும் நெருக்கடிகள், அவசர தேவைகளுக்கேற்ப அவற்றை மதிப்பிடும்படி அழைக்கப்படுகிறோம், வரவிருக்கும் ஆயர்மன்றக் கூட்டத்தை மனத்திற் கொண்டு, இந்தத் தெய்வீக கொடைகளின் உண்மையை உணர்ந்து, சுயபொறுப்புணர்ச்சியுடன் சொல்லினாலும், சான்றினாலும், மனுக்குலம் தன்னையறியாமலே ஏக்கத்துடன் காத்திருக்கும் அந்த ஞானத்தையும் நம்பிக்கையையும் அதற்கு அளிப்பதனாலும் நற்செய்திப் பணியை மேற்கொள்ளுமாறு பொதுநிலையினரை, குறிப்பாக இளைஞரை ஊக்குவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

திருச்சபைச் சமூகத்திற்கு ஒரு குறிப்பிட்ட பங்களிப்பைச் செய்யுமாறு அழைக்கப்பட்டுள்ள பொதுநிலை அழைத்தல்கள், இன்று தன்னும் இறைமக்கள் மத்தியில் மறை பரப்புதல் என்னும் கொடையின் வலிமைமிக்க தனிக்குறிப்புடைய வெளிப்பாடாகும். கடந்த காலத்தில் இருந்ததைவிட, இன்று அதிகமாக மறைபரப்புப் பணிக்குத் தம்மை முழுமையாக அர்ப்பணித்த மக்களுக்குத் தேவையேற்பட்டுள்ளது; ''தகுந்த இயற்கையான குணவியல்புகளும்

## 4. மறையாசிரியர்.

இது தொடர்பாக நான் நற்மகுதி வாய்ந்த எண்ணற்ற மறையாசிரியரை முதன் முதலாக நினைவுகூர விரும்புகிறேன். இத்தகைய மறையாசிரியர்கள் ஆண்களாயினும் சரி, பெண்களாயினும் சரி தனிப்பட்டதும்—மிகத் தேவையானதுமான பங்களிப்பை விசுவாச வளர்ச்சிக்குச் செய்துள்ளனர். இன்று, இவர்களது உழைப்பு மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும் (திருச்சபையின் பறைபரப்புப் பணி 17). மறைபரப்பு நாடுகளில் தனித்துறைப் பயிற்சி பெற்ற இந்த உழைப்பாளிகள் இல்லாதிருந்தால், இன்று செழித்தோங்கும் எத்தனையோ ஆலயங்கள் அமைக்கப்பட்டிருக்க முடியாதென்பது மறுக்க முடியாததாகும். அவர்கள் விசுவாசத்துக்கு நேரடியான சாட்சிகளாக விளங்கியிருக்கிறார்கள். இன்றும் விளங்கி வருகின்றார்கள். சில வேளைகளில், காலவரிசையில் அவர்களே முதலில் நற்செய்தியை அறிவித்தவர்களாகவும் இருந்திருக்கிறார்கள். இங்ஙனம் கிறிஸ்தவ வாழ்வை நிறுவி, வளர்த்து அதிகரிக்கச் செய்யும் பணியிற் செயலாற்றலுள்ள உடனுழைப்பாளராக விளங்கியுள்ளனர். நற்செய்திப் பணியின் அமைப்பிலேயே அவர்களது பணியும் இணைந்துள்ளது. ஆகவே, அவர்களின் உழைப்பு, திருச்சபைக்கு என்றும் தேவையானது. இந்த அத்தியாவசியமான பணிக்காக அவர்கள் எண்ணிக்கையிலும், தரத்திலும் அவர்கள் வளர்ச்சியடைய வேண்டுமென்பதே எனது நம்பிக்கையாகும். தமக்குத் தேவைப்படும் பண உதவியையும் ஏனைய உதவிகளையும் எப்போதும் அடைந்து கொள்வார்கள் என நம்புகிறேன். போதிய ஆதாரத்தைப் பெறுவதற்கு அவர்களுக்கு உரிமையுண்டு என்பது வெளிப்படை. அவர்களது சொந்த சமூகம் வறுமை காரணமாக அவர்களைத் தாபரிக்க முடியாவிட்டால், ஏனைய கிறிஸ்தவர்களின் கூட்டொருமைப்பாடு இந்தத் தாபரிப்பை அளிக்க வேண்டும்.

## 5. பொதுநிலைத் தொண்டர்கள்.

மற்றொரு வகையான பொதுநிலையினரின் அர்ப்பணிக்கப்பட்ட மறைப்பணியையும் நினைவிற் கொள்கிறேன். திருச்சபை எல்லாவற்றுக்கும் மேலாக இன்று இதனை மிகு பயனுக்கு உரியதாகக் கருதுகிறது. இதுவே பொதுநிலைத் தொண்டரின் பணி. இது திருச்சபையின் மறைப்பணிக்கு அதிக அளவு பங்களிப்புச் செய்து, நற்செய்திப் பணி முன்னேறுவதை இலகுவாக்கும் நியாய பூர்வமான முயற்சியாகும். அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் ஒரு நேரடியான விதத்தில் துணைபுரிவதற்குத் தம் வாழ்வின் சில ஆண்டுகளை அர்ப்பணிக்கும் கிறிஸ்தவ பொதுநிலையினரின் சேவையே இது.

இங்ஙனம், பிற சமூக சக்திகளோடு ஒன்று பட்டு அவர்கள் ஆற்றும் மனித முன்னேற்றப் பணி மட்டுமல்லாது, கிறிஸ்தவர்கள் என்ற முறையில் தமது சகோதரரிடத்தில் ஆன்மீக, ஒழுக்க வளர்ச்சி குறைவுபடாதிருக்கவும் முயற்சி எடுப்பார்கள். இறையருளுக்கு முழுமையாக உள்ளத்தைத் திறக்கும்போதுதான் ஒருவருக்கு இது சாத்தியமாகும். விசுவாசத்தினாலும், நற்செய்தியின் அன்பினாலும் தூண்டப்பட்டு, ஆன்ம சரீரங் கொண்ட முழு மனிதனின் அன்புக்கும், சேவைக்கும் சாட்சிகளாக விளங்குவார்கள்.

இவ்விடயத்திலும், ஆயர் மன்றத்தின் மூலமாக அநேக தலத்திருச்சபைகள் இந்த விதமான மறைபரப்புச் சேவையை மீண்டும் கண்டு பிடித்து, இப் பொது நிலை அழைத்தல்களைத் தெளிவாகக் கண்டுணர்ந்து, விருத்தி செய்வதில் ஈடுபாடு கொள்வார்களென நம்புகிறேன். இந்த அழைத்தல்களை அநேகர் மகிழ்ச்சியுடன் ஏற்றுப் பிற சமூக சகோதரர் மத்தியிற் செயலாற்ற

(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டுக்கொரு பாதுகாவலன் - உங்கள் பங்கில் நடைமுறைப் படுத்துங்கள்

# தேசிய இயக்குனரின் செய்தி

அன்புச் சகோதரரே,

இன்று நாம் மறைபரப்பு ஞாயிறைக் கொண்டாடுகிறோம். இந்நாளில் உலகெங்கணுமுள்ள கத்தோலிக்க மக்கள் தமது ஞானஸ்நான அழைப்பின் அடிப்படைக் கடமையாகிய சகல மக்கள் மத்தியிலும் நற்செய்தியைப் பரப்புவது பற்றிச் சிந்தித்துச் செபித்து வருகின்றனர்.

## ஆண்டவர் மறைபரப்பாளரை அனுப்பினர்.

எமதாண்டவர் தாமே, இவ்வாறு செய்யுமாறு தமது சீடர்களுக்குக் கட்டளையிட்டார் (மத். 28: 18-20). உண்மையில், யேசுநாதர் தமது வாழ்வு, மரணம், உயிர்ப்பு ஆகியவற்றின் மூலம், பிதாவினது மனுக்குல மீட்புத் திட்டம் நிறைவேறியதாகக் கருதினர். தமது பகிரங்க வாழ்வின்போது இறையரசை அறிவிக்கவும், குணப்படுத்தவும் சீடரைத் தாமே மறைபோதகப் பயணங்களில் அனுப்பினர் (லூக், 9: 2)

ஆண்டவரது இந்த நிலைப்பாட்டால், தூண்டப்பட்ட அப்போஸ்தலர்கள், அவரே மீட்கும் இறைவன் என இடைவிடாது அறிவித்தனர். அவர்கள் யேசுவைப் போதித்தது மட்டுமல்லாமல், அவரது அன்புக்குச் சான்றுபகர்ந்தனர். இதன் பொருட்டுக் கஷ்டதுன்பங்கள், கலாபனைகள், வேதசாட்சி மரணம் ஆகியவற்றைச் சகித்தனர். மாபெரும் மறைபரப்பாளராகிய புனித சின்னப்பர் கொரிந்தியர் சபைக்கு எழுதுகையில், நற்செய்தியைப் பரப்புவதிலும், ஆண்டவருக்குச் சான்று பகர்வதிலும் தாம் அனுபவித்த சொல்லொணுத் துன்பங்களை விவரிக்கிருர் (ii கொரிந் 11: 22-33). கிறிஸ்துவின் மறைபரப்பாளனுகத் தாம் அனுபவித்த துன்பங்களையிட்டு மகிழ்ச்சிகொண்டார் (ii கொரிந் 12: 10).

எமது உப கண்டத்திலும், கிறிஸ்தவத்தை அப்போஸ்தலரான புனித தோமையார் வரை கொண்டுசெல்லும் வரலாற்றுப் பாரம்பரியங்கள் உள்ளன.

அன்று, திருச்சபை நற்செய்தி பரப்புவதிற் சகல முயற்சிகளையும் எடுத்தது. தனது இருபது நூற்றூண்டு வாழ்வு முழுவதுமே உலகின் அந்தங்களுக்கெல்லாம் ஆயிரக்கணக்கான மறைபரப்பாளரை அனுப்பித் துணிச்சலுடன் யேசுவைப் போதித்தது.

## ஆசாரத்துக்குரிய ஜோசவ் வாஸ் முனிவர்.

இந்த ஆண்டில், இலங்கை மக்களாகிய நாம் ஜோசவ் வாஸ் முனிவர் எமது நாட்டிற் காலடி வைத்த 300வது ஆண்டு நிறைவைக் கொண்டாடுகிறோம். ஒல்லாந்தரின் கொடுங்கோலாட்சியின் கீழ் சிலோன் (இலங்கை) தீவில் வாழ்ந்த கிறிஸ்தவ மக்களின் பரிதாப நிலையையும், அவசிய தேவையையும் பற்றி அவர் கேள்வியுற்றுர். கத்தோலிக்கக் குருக்கள் நாட்டிற்குட் பிரவேசிப்பதைத் தடை செய்து கத்தோலிக்கச் சமயத்தின் நாமத்தையே அழித்துவிட முயன்ற ஒல்லாந்தரின் செயலைப்பற்றிக் கேள்வியுற்ற அவரது உள்ளம் உருகியது. தமக்குநேரிடக்கூடிய சகல கஷ்டங்கள், உயிராபத்துக்களைப் பொருட்படுத்தாது இந்தப் பெருமுயற்சியை மேற்கொள்வதெனத் தீர்மானித்தார். (பிதா போர்ணியோலா எழுதிய இலங்கையிற் கத்தோலிக்கத் திருச்சபை—ஒல்லாந்தர் காலம் I பக்கம் 510)

1687இல், யாசக வேடத்தில் அவர் இலங்கைக் கரையில் வந்திறங்கினர். தன்னந்தனியாகத் தீவின் வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு, மத்திய பகுதி ஆகிய இடங்களிலுள்ள சகல கத்தோலிக்க மக்களையும் தரிசிக்கலானுர். அவ்வேளையிற் பசி. தாகம், சிறைவாசம், வனவிலங்குகளின் தொல்லை ஆகியவற்ருல் உயிருக்கும் உடலுக்கும் பேராபத்துக்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. அவர் அனுபவித்த துன்பங்கள் எமது விசுவாசம் அழிந்துபோகாமற் பாதுகாத்தன.

ஆகவே, இறைவனின் புனித மனிதரும், மாபரும் மறைபரப்பாளருமாகிய இவரை நினைவுகூர்வதற்கு, மறைபரப்பு ஞாயிறு, ஒரு தக்க தருணமாகும். அதே வேளையில், நற்செய்தியை உலகம் முழுவதும் பரப்புவதில் எமது சொந்தக் கடமைகளைப்பற்றி நாமனைவரும் சிந்திப்பதற்கும் இஃது ஒரு தக்க தருணமாகும்.

## எமது கடப்பாடுகள்.

ஒவ்வொரு கிறிஸ்தவனும் தனது ஞானஸ்நானத்தின் வழியாகப் பெற்ற கிறிஸ்துவின் மேலுள்ள மீட்புச்சக்தியுள்ள விசுவாசத்தை, தான் அனுபவிப்பது மட்டுமல்லாமல், தான் சந்திக்கும் ஒவ்வொரு மனிதனுடனும் இந்த அருநிதியத்தைப் பகிர்ந்துகொள்ளுமாறு உந்தப்படவேண்டும். இது மறைத்து வைக்கக் கூடிய ஒரு பொக்கிஷம் அன்று. ஆகவே, ஒருவர் தமது விசுவாசத்தை எந்த அளவுக்குப் பெறுமதியுள்ளதாக மதிக்கின்றுரோ, அந்த அளவுக்கு அதைப் பிறருக்கு அறிவிக்குமாறு உந்தப்படவேண்டும். நற்செய்திப் பணியின் அடித்தளம் இதுவேயாகும். இது, குருக்கள், துறவியர், சந்நியாசிகள், கன்னியர்களின் பொறுப்புமட்டுமன்று, இது, ஞானஸ்நானம் பெற்ற ஒவ்வொருவரின் பொறுப்புமாகும். ஆகவே, பொதுநிலையினரின் விசேட பொறுப்பாகும். குருக்களையும் துறவிகளையும் விட, கூடிய அளவில் பிறமத சகோதரரோடு அவர்கள் தொடர்புகொள்ளக்கூடியதாக இருப்பதால், அவர்கள் மெய்யாகவே சிறப்பான ஓர் இடத்தை வகிக்கின்றனர். இந்த ஆண்டில், திருச்சபை விசேஷமான விதத்திற் பொதுநிலையினரின் பங்கை ஆராய்கின்றது. நற்செய்திப்பணியில் அவர்கள் முன்னணியில் நிற்கவேண்டும்.

## நற்செய்திப்பணி திருச்சபையைப் புதுப்பிக்கின்றது.

நற்செய்திப்பணி எப்போதுமே திருச்சபைக்கு ஒரு புது வலிமையையும், உயிர்த்துடிப்பையும் கொடுக்கிறது, ஏனெனில், தாம் அறிவிக்கும் உண்மைகளுக்கு மெய்யான சாட்சிகளாக விளங்கும்படி அஃது இடைவிடாது நற்செய்தியாளருக்கு அழைகூவல் விடுக்கின்றது. கிறிஸ்துவின் செய்தி அறிவிக்கப்படும் ஒவ்வொரு முறையும் அஃது, அறிவிப்பவரைத் தூய்மைப்படுத்தி வலிமையைக் கொடுக்கின்றது. தாம் அனுசரிக்காத ஒன்றை ஒருவராற் போதிக்கமுடியாது.

இந்த விதத்தில், எமது சகோதர சகோதரிகளுக்கு நற்செய்தியைப் போதிப்பதில், நாம் அக்கறை காட்டாவிட்டால், எமது சொந்த விசுவாசத்தில் எமக்கு உறுதியும் மகிழ்ச்சியும் இல்லை என்பதற்கு அஃது ஓர் அடையாளமாயிருக்கலாம் என்று கூறவேண்டியிருக்கிறது. எனவே, இது போன்ற ஒரு நாளில் விசுவாசத்தில் எமது சொந்த அனுபவத்தைக் குறித்தும், எந்த அளவுக்கு அதைப் பிறருடன் பகிர்ந்துகொள்ள ஆயத்தமாயிருக்கிறோம் என்பது குறித்தும் நாம் நன்கு சிந்திக்கவேண்டும். நாம் திடநம்பிக்கையுள்ள கிறிஸ்தவர்களா? கிறிஸ்துவின் நற்செய்திக்கு ஆழ்ந்த ஆதாரமுண்டு என மற்றவர்கள் நம்பிக்கை கொள்ளச் செய்ய எம்மால் முடியுமா? அப்போஸ்தலர்களான புனிதசின்னப்பர். புனித தோமையார், புனித பிரான்ஸிஸ் சவேரியார், ஆசா. ஜோசவ்வாஸ் ஆகிய இறைவனின் சிறந்த பணியாளர் தமது விசுவாசத்தில் திடநம்பிக்கையும் மகிழ்ச்சியும் கொண்டிருந்தமையால் நற்செய்தியைப் பரப்பும்படி உந்தப்பட்டனர். எல்லாவற்றையும் விட்டுவிட்டு முன்னர் அறியாத இடங்களுக்குச் சென்று ஆண்டவரைப் பற்றிப் போதித்துச் சான்று பகர அவர்களால் முடிந்தது.

புனித சின்னப்பரைப்போல் அவர்கள் உள்ளத்தில் ஒரு பலமான தூண்டுதலை உணர்ந்தனர். "நான் நற்செய்தி போதிக்காவிடில் எனக்கு ஐயோ கேடு!" 1கொரிந் 9:16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நற்செய்திப்பணி திருச்சபைக்குப் புது வலிமையையும் உயிர்த் துடிப்பையும் கொடுக்கிறது.



## சிறப்பாகக் கொண்டாடுவது எப்படி?

ஆசா. ஜோசவ் வாஸ் முனிவரை நினைவு கூர்வது, அவர் வாழ்க்கை வரலாற்றைப் படிப்பது, அவர் முத்திப்பேற்றிற்காக மன்றுடுவது, பங்குகளிலும் மறைவட்ட, தேசிய மட்டங்களிலும் அவருக்கு விசேட நினைவுதினங்கள் நடத்துவது, இவையனைத்தும்பயனுள்ளவை தாம். ஆனுல், இது தன்னிலேயே போதுமானதன்று. எமது விசுவாசத்தை ஆழமாக விளங்கிக் கொள்ளவும், அதில், திடநம்பிக்கை கொள்ளவும், மகிழ்ச்சியுள்ள, உண்மையான சான்றுபகரும் கிறிஸ்தவர்களாயிருந்து எமது சொந்த வழியில் எம்மைச் சூழவுள்ள உலக மக்களுக்குக் கிறிஸ்துவைக்கொண்டு செல்பவர்களாக இருக்கவும் நல்ல முயற்சி செய்யப்படவேண்டும். நாம் விசுவாசத்தில் மகிழ்ச்சியுள்வர்களாயிருந்தால் மட்டுமே அதைத் துணிச்சலுடன் எடுத்துக்கூறவும், எம்மிடம் கேட்கப்படும் தியாகங்களைச் செய்யவும் எம்மால் முடியும்.

இத்தீவின் நான்கு மூலைகளிலும் இறைவனின் அன்புச் செய்தியை மகிழ்ச்சியுடன் எடுத்துக்கூறும் திடநம்பிக்கையுள்ள ஒரு கிறிஸ்தவ சமூகத்தை இலங்கையிற் கட்டியெழுப்புவதே பிதா ஜோசவ் வாஸ் அவர்களைத் தகுந்த விதமாக நினைவுகூர்வதாகும். களைப்புற்ற, அசட்டையான, உயிரற்ற, மடிந்துகொண்டிருக்கும் சமூகமாக அதை ஆகவிடலாகாது.

எமது கத்தோலிக்கச் சமூகம் கொஞ்சம் கொஞ்சமாக இவ்விதமாக-அதாவது, அக்கறையற்ற ஒரு சமூகமாக மாறிக்கொண்டிருப்பது வருத்தத்திற்குரியது. கணிசமான தொகையினர் திருச்சபையை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கின்றனர். சிலர் புதிய கிறிஸ்தவ சபைகளிற் சேர்கின்றனர். மற்றவர்கள் தமது விசுவாசத்தைப் பகிரங்கமாக வெளிக்காட்டவே அஞ்சுகின்றனர். பிறருக்கு அறிவிப்பது பற்றிப் பேசத் தேவையில்லை. வேறு வழிகளாலும் வெளியேற்றங்கள் நிகழ்கின்றன. தவருன இறையியற் போக்குகளுக்கு விட்டுக்கொடுப்பதனுலும், மறைபரப்பு ஆர்வம் குறைக்கப் பட்டதனுலும், நற்செய்திப் பணி ஓரளவுக்குச் சமய சமரசமாக்கப்பட்டுள்ளமையும், "நாம் நற்செய்தியை அறிவித்தாற் பிறர் என்ன சொல்வார்கள், என்ன செய்வார்கள்" என்ற அச்சத்தினுலும் பொதுநிலையினர் மத்தியில் ஒரு விரக்தி மனப்பான்மை வளர்ந்துவருகிறது.

எமது காலத்தை விட அரசியல், சமூக ரீதியில் மிகக் கஷ்டமானதும், சிக்கலானதுமான ஒரு காலகட்டத்தில் எமது மக்களின் விசுவாசத்தைப் பாதுகாக்கப் பிதா ஜோசவ் வாஸ் எத்தனையோ ஆபத்துக்கள் மத்தியில் மிகவும் கஷ்டப்பட்டு உழைத்தார் என்பதை நாம்மறந்துவிடலாகாது. நற்செய்தியை அறிவிக்க அவர் இடைவிடாது பாடுபட்டார். இன்று, எமது சமுதாயம் இருக்கும் நிலைக்கு இந்த மாபெரும் இறைபணியாளரின் உழைப்பே பெரிதும் காரணமாகும். தமது மறைப்பணியின் விளைவுகள் எதுவாகுமோ என்று அவர் அஞ்சினவரல்லர்.

ஆகவே. இந்த மறைபரப்பு ஞாயிறன்று, ஆயர்கள், குருக்கள், துறவிகள், பொதுநிலையினர் அடங்கிய இலங்கையின் திருச்சபை முழுவதுமே நாம் இறைவனுக்குச் சொந்தமானவர்கள் என்ற மகிழ்ச்சிகரமான உணர்வையும், எமது அழகிய தீவு முழுவதும் சொல்லாலும் செயலாலும் இறையரசைப் பரப்புதற்கு வேண்டிய புத்தூக்கத்தையும் மீண்டும் எழுப்புவதற்குத் தன்னை முழுமனதுடன் அர்ப்பணிக்கட்டும்.

ஆசா. ஜோசவ் வாஸ் முனிவர் எமது நாட்டிற்கு வந்த 300வது ஆண்டு நிறைவுடன் கொண்டாடப்படும் இம்மறைபரப்பு ஞாயிறு இலங்கைத் திருச்சபையிற் புத்தூக்கத்துடன் மறைபரப்பில் ஈடுபடுவதற்கு வேண்டிய அருளைப் பெற்றுக்கொள்ளக்கூடிய ஒரு தருணமாக இருப்பதாக.

பிதா மல்கம் ரஞ்சித்
தேசிய இயக்குநர்

---

**திருச்சபை தனது
இருபது நூற்றூண்டு வாழ்வு முழுவதுமே
உலகின்
அந்தங்களுக்கெல்லாம் ஆயிரக்கணக்கினராய்
மறைபரப்பாளரை அனுப்பித்
துணிச்சலுடன் யேசுவைப் போதித்தது.**

## எம்கருத்து

### அரசியலா?

''பாதுகாவலன் ஆசிரியர் அரசியல்வாதி போலத் தெரிகிறதே. அதிகப்பிரசங்கியாக அதிகம் அலட்டிக் கொள்கிறாரே'' என்று பலரும் கவலைகொள்ளும் அளவுக்கு எம்கருத்தில் அரசியல் கலந்துவிட்டது.

''திருச்சபை அரசியலில் ஈடுபடலாமா?'' என்று பலரும் அவ்வப்போது கேள்விகள் எழுப்பியிருக்கிறார்கள். அரசியல் மக்கள் வாழ்வோடு இரண்டறக் கலந்துவிட்ட நிலையில், அரசியலே மனித வாழ்வின் பெரும்பாகத்தை இவ்வுலகில் நிர்ணயிப்பதால் அரசியலில் இருந்து ஒதுங்கிக்கொள்வது தர்மமாகாது.

திருச்சபைப் பிரமுகர்கள், அரசியல் வாதிகளாக மாறக்கூடாது. எந்த ஓர் அரசியற் கட்சியிலும் அங்கம் வகிக்கக் கூடாது. ஆனால், அவ்வப்போது இறை வாக்குரைஞராகப் பக்கச் சார்பற்ற நிலையில் நின்று துணிவுடன் குறைகளைச் சுட்டிக்காட்டவேண்டும்.

அண்மையில், திலீபனின் உண்ணாவிரதத்தின் போது ஒரு கன்னியாஸ்திரி அனுதாபிகளில் ஒருத்தியாகக் காட்சியளித்தார். அங்கு சென்றவர்கள் மட்டுமன்றி, மற்றவர்களும் காணக்கூடியதாகத் தொலைக் காட்சியிலே (நிதர்சனம்) அது படம்பிடித்துக் காட்டப்பட்டது.

சாதாரண ஒரு தமிழ்ப் பெண்குலத்தைச் சேர்ந்தவராக, அவரும் அனுதாபியாக அங்கு சென்றிருந்தார். ஆனால், அவரது பிரசன்னம் மதப்பிரமுகராக அங்கு தோற்றம் கொடுத்ததால் உண்ணாவிரதம் மத ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட செயலாகக் கருத வழிவகுத்து நின்றதை எவரும் மறுக்க முடியாது.

திலீபனின் உண்ணாவிரதம் முற்றிலும் சரியானது என்று துணிவுடன் கூறமுடியாத நிலையில், அதில் அங்கம் வகிப்பது தவறில்லையா?

ஒரு மதப் பிரமுகர் ஓர் அரசியற் கட்சியுடனோ, போராளிக் குழுவுடனோ தன்னை இணைத்துக்கொள்கையில், அக்குழுவின் நிறைவிற் பங்காளியாவது போலக் குறைபாடுகளிலும் பங்காளியாகின்றார். பகிரங்கமாகக் குறைபாடுகள் மக்களால் உணரப்பட்டுள்ளதோடு, அங்கீகரிக்க முடியாத நிலையிலே பல குறைபாடுகள் இருக்கின்ற சூழ்நிலையில் அவருடனிணைவது தானும் அதிற் பங்குகொள்வதாகும்.

அரசியல் வாதிகள் தெரிந்துகொண்டே பல தீச் செயல்களைச் செய்யவேண்டிய இக்கட்டான சூழ்நிலைகள் பலவற்றுக்குத் தள்ளப்படுகின்றனர். அவை தவறான போதிலும் அவற்றைச் செய்யாது போனால், தமது நோக்கம் நிறைவேறாதென்பதனால் அத்தகைய செயல்களிற் கட்டாயம் ஈடுபடவேண்டி இருக்கிறது. அத்தகைய செயல்கள் அங்கீகரிக்கப்பட முடியாதவை. தவறு எப்போதும் தவறுதான். நல்ல முடிவுகள் தீய வழிகளை நல்லவையாக்கா. தீயது தீயதே.

எமது கடந்தகாலப் போராட்ட வடிவங்கள், பல திருப்பு முனைகளைக் கண்டன. வங்கிக் கொள்ளைகள், கோவிற் கொள்ளைகள், தனிநபர் உடைமைக் கொள்ளைகள், தேவையற்ற உயிர்க் கொலைகள், உடைமை அழிப்புக்கள், தற்கொலைகள் இவை கெட்ட கனவாக மறக்கப்பட வேண்டியவை. இவற்றையிட்டு, எவருமே பெருமைப்படமுடியாது. இவற்றிற்கு உரிமை பாராட்டுவது வெட்கக்கேடு.

விரக்தியின் எல்லையில் எழுந்த வெளிப்பாடுகளாக, துர்அதிஷ்ட நிகழ்வுகளாகவே இவை எப்போதும் கொள்ளப்பட வேண்டியவை.

இவை அனைத்தின் மத்தியிலும், மக்களின் தியாகங்கள், வேதனைகள், இழப்புக்களே நம்மை இன்னும் மனிதர்களாகத் தலைநிமிர்ந்து நிற்கத் துணிவைத் தருகின்றன. எனவே, தீமைகளைத் தவிர்ப்போம், தியாகங்களைப் போற்றுவோம்.

தீயவைகளிற் பங்காளியாகாதீர்கள். நெறிப்படுத்துவதில் துணிந்து செயற்படுங்கள். நியாயபூர்வமாகக் கோரிக்கைகளை முன்வைத்து, மக்கள் போராட்டங்களால் நன்மைகளைத் தேடிக்கொள்ளுங்கள்.

''முடிவும் இடையூறும் முற்றியாங்கு எய்தும் படுபயனும் பார்த்துச் செயல்.''

# திருத்தந்தையின் செய்தி....

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆயத்தமாகவும் விருப்புடனும் இருப்பார்கள்.

இந்த அழைத்தல்களின் அடித்தளத்திற் சமநிலையும் இணக்கமுமுள்ளதோர் அர்ப்பணம் இருத்தல் வேண்டும். அப்போதுதான் சமூக கலாசார விருத்தி, சமய விசுவாசத்துடன் எப்போதும் தொடர்புள்ளதாக இருக்கும். இந்தக் கஷ்டமான, கடும் உழைப்புத் தேவைப்படும் பணிக்கு விவேகமான தெரிவும், போதிய ஆயத்தமும், தொழில் ஆற்றலும் எல்லாவற்றிற்கும் மேலாக முதிர்ச்சியுள்ள ஆளுமைகளும் அவசியமாகும்.

## 6. வேறுவிதமான பணிகளின்மட்டில் திறந்த மனப்பான்மை.

முழு உண்மையை நோக்கித் திருச்சபையை வழிநடத்தும் தூய ஆவியானவர், அதனை ஒன்றிணைவிலும் பணியிலும் ஒன்றாக்கி, தமது கொடைகளால் அதனை வளம்படுத்தி, தமது கனிகளால் அதனை அலங்கரிக்கிறார். ''எல்லா நிலைகளிலுமுள்ள விசுவாசிகளுக்கும் சிறப்பான அருட்கொடைகளையும் வழங்குகின்றார், இவற்றால் பல்வேறு அலுவல்களையும் கடமைகளையும் மேற்கொள்ள அவர்களுக்குத் தகுதியையும் ஆர்வத்தையும் அளிக்கிறார்''

(திருச்சபை 12)

மறைபரப்புத் துறையில், தமது பிரசன்னத்தின் காரணமாகப் பொதுநிலையினரிடையிலும் வழங்கப்படும் விசேட அருட்கொடைகளை அறிந்துகொள்ளவும், மகிழ்ச்சியோடு ஏற்றுக்கொள்ளவும் நாமனைவரும் அழைக்கப்பட்டுள்ளோம்.

''திருச்சபையின் மறுமலர்ச்சிக்கும் அதன் வளர்ச்சிக்கும்'' நன்மைபயக்கும் அலுவல்களுக்காகவும் கடமைகளுக்காகவும் அளிக்கப்படும் இத்தகைய ஆன்மீகச் செல்வங்களைத் திறந்த மனத்துடனும், பிரமாணிக்கத்துடனும் ஏற்று அவற்றுக்கு மதிப்பளிக்கும்படி இளம் திருச்சபைகளுக்கு அழைப்பு விடுக்கப் பட்டுள்ளது.

ஆகவே, கிறிஸ்தவ சமூகங்களின் திருவழிபாட்டு வாழ்விலும், அவைகளின் திட்டங்கள் மேய்ப்புப்பணிக் குழுக்களிலும் கலாசார, சமூக, பொருளாதார உலகில் உள்ள கிறிஸ்தவ பிரசன்னத்திலும், அன்பைக் கடைப்பிடிப்பதிலும், பொது நிலையினர் பல்வேறு விதங்களிற் பங்குகொள்வதைப் பற்றி ஆராய்வதும் நடத்திவருவதும் அவசியமாயிருக்கின்றது.

இப்பணிகளை மேற்கொள்வதிற் பொதுநிலையினரான பெண்கள் இன்னும் பரந்த, செயலுரம் மிக்க விதத்திற் பங்குகொள்ளும்படி அவர்களைத் தூண்ட விரும்புகின்றேன். மறைபரப்பு என்னும் மாபெரும் செயற்களம் இவர்களின் தாராள மனப்பான்மையும், சிறப்பான ஆதரவும் நிறைந்த சேவைக்காகக் காத்திருக்கின்றது, அவர்கள் பாரம் பரியமான தொழில்களில் (வைத்திய சாலைகள், பாட சாலைகள், சுகாதார சேவை) அல்லது குடும்பநல சேவை, பிறமதத்தவருடனே அனுசார மற்ற கத்தோலிக்கருடனோ உரையாடல், கத்தோலிக்க பண்பாட்டைப் பரப்புதல், செபம், திருவழிபாடு என்பவற்றில் தொடர்ந்து பிரசன்னமாயிருத்தல் முதலிய நேரடியான நற்செய்திப் பணிகளிற் பற்றுடன் ஈடுபடுவார்கள் என நம்பப்படுகிறது.

## 7. பாப்பரசரின் மறைபரப்புச் சபைகள்.

பரிசுத்த ஆவியின் திருநாளான இன்று, இப்பணியின் அவசர தேவையை முன்னிட்டு இறைமக்களைப் புனிதப்படுத்தி வழிநடத்தி, புண்ணியங்களால் அணிசெய்யும் ஆவியானவரின் சக்திமிக்க உயிர்மூச்சுக்கும், உயிரூட்டும் ஆவிக்கும் திருச்சபை புது ஆர்வத்துடன் தன்னைத் திறக்கும்படி உந்தப்படுகிறது, இதனாலேயே, கிறிஸ்தவர்களுக்கு அடையாளமாகவுள்ள அருங்கொடைகள் பலனளிக்கும்.

நான் பாப்பரசரின் மறைபரப்புச் சபைகளிடம் ஒரு விசேட பொறுப்பை ஒப்படைக்க விரும்புகிறேன். இச்சபைகள் தமது தோற்றுவாய் அமைப்பு, நோக்கம் ஆகியவற்றால் அனைத்துலக மறைபரப்புதலின் விசேட கருவிகளாக விளங்குகின்றன. இதன் காரணமாக, தமது கிளைகளுக்கு உயிரூட்டும் செயலின் மூலம், இவை இறைமக்களிடத்தில் எல்லாவற்றுக்கும் மேலாகப் பொதுநிலையினரிடத்தில், மறைபரப்பு உணர்வை மடிந்து போகாமற் காக்கமுடியும். அதேசமயத்தில் இப்பணியைச் சிறப்பாகப் பெற்றவரிடம் அவ்வழைத்தலை இன்னும் முனைப்பாக்க முடியும்.

ஆன்மீக மட்டத்திலும், உலகியல் மட்டத்திலும சகல விசுவாசிகளிடமும் மறைபரப்பின் மீது ஆர்வத்தை மூட்டி அவர்களை அதிற் பங்குகொள்ளச் செய்வதும், இளைஞரிடத்தில் மறைபரப்பு அழைத்தல்களை வளர்ப்பதும் அவைகளின் அலுவலாகும். வெறுமையான எதிர்காலக் கனவுகளிலும், அநேக ஐயப்பாடுகளிலும் சிக்கித் தவிக்கும் உலகிலே, பொதுநிலையினருள் அநேகர் ''இதோ நான் இருக்கிறேன், என்னை அனுப்பும்.'' (இசை. 6: 8) என்று ஆண்டவரின் அழைப்புக்கு விடையிறுக்கத் தக்கதாக அவர்களிடத்தில் மேன்மையான இலட்சியங்களை ஏற்படுத்தி அவற்றை வளர்த்து வருவதில் அயராதிருப்பனவாக.

## 8. விசுவாசத்திலும் மறைபரப்புதலிலும் எமக்கு முன்செல்லும் அன்னை.

''மரியாளின் ஆண்டை நாம் கொண்டாடுவதை நினைவு கூர வேண்டும். இது ஒரே வேளையில் நடக்கும் மற்றொரு நன்னிகழ்ச்சியாகும். திருச்சபையின் மறைப்பணியில் ஆரம்பத்திலிருந்தே பிரசன்னமாக இருந்த அவளது வழிகாட்டுதலை நோக்குவது திருச்சபையின் புதல்வர் புதல்வியர் அனைவருக்கும் இயல்பானதும், சுலபமானதும், ஆறுதலளிப்பதுமாகும்''(மீட்பரின் அன்னை 28) கிறிஸ்து சகாப்தத்தின் இரண்டாயிரம் ஆண்டு நிறைவை அண்மிக்கொண்டிருக்கும் திருச்சபையின் பயணத்தின் போது அதன் மறைப்பணியில் ஒரு புதிய, பெருந்தன்மையான அர்ப்பணம் ஏற்பட வேண்டுமானால், எப்போதும் மரியாளோடு சேர்ந்து செல்வது அவசியமாகும்.

திருச்சபையானது கிறிஸ்துவைப் பின்பற்றி, நிலையான பிரமாணிக்கத்துடன், மக்கள் மக்களினங்களின் வரலாற்றினுள் தனது குறிப்பிட்ட பணியை நிறைவேற்ற முயல்கிறது. மீட்பராகிய அவளது குமாரனின் பணியில் ஒத்துழைக்கும் சந்தர்ப்பத்தில் அது மரியாளைச் சூழ்ந்து, ஒரு புதிய பெந்திக்கோஸ்துக்காகக் காத்திருக்கின்றது (அப். பணி 1: 14). ஆகவே தமது சொந்தப் பணியின் பொருளை நன்கு விளங்கி அதைச் செயற்படுத்தச் சகல கிறிஸ்தவர்களும், விசுவாசத்தில் திருச்சபைக்கு முன்செல்பவளான மரியாளை நோக்க வேண்டும். பரலோக அரசில், அது திட்டவட்டமான ஒரு முடிவுக்குக் கொண்டுவரப்படும் வரை, கிறிஸ்து ஆற்றிய மீட்புப் பணியில் ஒத்துழைப்பதற்கும் மரியாளே எமது வழிகாட்டி.

எனது அப்போஸ்தலிக்க ஆசிகள்.

வத்திக்கான் ஜூன் 7, 1987,
தூய ஆவியின் திருநாள் எனது பதவிக்காலத்தின் 9 ஆம் ஆண்டு

ஒப்பம்
2ஆம் அருள் சின்னப்பர்

---

**திருச்சபை பிறந்தது மறைபணிக்காகவே.
எனவே,
நற்செய்தி அறிவிப்பது
அதன்
வாழ்வின் வழியாகும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைஞர் உலக அன்பு நெஞ்சன் வி. பிக்கு.

11-9 87 அன்று அன்பு இளம் உள்ளங்களுக்குத் தாங்கள் அளித்த அறிவுரைகளை யான் கண்ணுற்றேன். பார தூரமான விடயமொன்றைப் பராமுகமாக எழுதியது மிகமிகக் கவலைக்கிடமானது. தயவு செய்து அதனை மறுபரிசீலனை செய்து பார்க்கும்படி தங்களை மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். இளமைப் பருவத்தைக் கடந்து வந்த காரணத்தால், அதாவது அநுபவரீதியாக இதைக் கூறுகின்றேன்

''பெற்றோருக்கும் பெரியோர்க்கும் வால்பிடிக்காதீர்கள்''

இதே வார்த்தையை, இந்நிலைக்கு உங்களை ஆளாக்கிய பெற்றோருக்கும், பெரியோர்க்கும் முன் உங்களாற் கூற முடிகின்றதா? ஏணியில் ஏறிவிட்டு அந்த ஏணியை எட்டி உதைக்கச்சொல்கின்றீர்களே. அதை, இளம்உள்ளங்கள் மனத்தில்விதைத்து அவர்கள் பக்கத்துணை இருக்கின்றீர்களே. இளமைப்பருவம் தடுமாறும் பருவம். தீமையும் நன்மையைப்போலத் தோன்றலாம் (21 வயதுவரை). இந்தக்காலத்திற் கண்டதும் காதல் கொண்டதே கோலம் என வாழ்பவர்கள் வாழ்க்கை பிற்காலத்தில் தந்தையற்ற பிள்ளைகளை உருவாக்கி விடுவதை நீங்கள் கண்டதில்லையா? பெற்றோர், பெரியோர் ஆசீர்வாதமின்றி வாழும் குடும்பம் மனநிம்மதியுடன் வாழ்வதைக் கண்டீர்களா?

மேலும், உங்கள் கடிதத்தை வாசித்த இளைஞர்களைச் சந்தித்தேன். அவர்களிடையே வாதிட்டேன். என்ன கூறினார்கள் தெரியுமா? உண்மையைத் தான் கூறுகின்றார்கள். இனிமேற் பயமில்லை, நாங்கள் நினைத்தபடி எதுவும் செய்யலாம் என்கிறார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு, நீங்கள் என்ன பதிலளிக்கப் போகின்றீர்கள்? ஒவ்வொருவனும் தான் சொல்வது தான சரி, தான் செய்வது தான் சரியென வாழத்தொடங்கினால் நாடு என்னையா ஆவது? அதற்குப் பின் குடும்பம் எதற்கையா?

வருந்தும் வாசகி
ஆர். எச்.

கண்டி
12-9-87

---

இளைஞர் உலகம்,
அ. ம. தி. குருமடம்
கொழும்புத்துறை,
16-10-87




அன்பு இளம் உள்ளங்களுக்கு,

அன்புடைய ஆர். எச்.

''பெற்றோருக்கும் பெரியோருக்கும் வால் பிடிக்காதீர்கள''...இதுதான் எனது கடிதத்தில் உங்களது மனத்தைத் தாக்கியுள்ள வசனம் ''வால் பிடிக்காதீர்கள்'' என்பதன் அர்த்தத்தைப் பிழையாக விளங்கிக் கொண்டுள்ளீர்கள்.....சாதாரணமாக ''வால் பிடிக்காதீர்கள்'' என்று கூறுவது, ஒருவன் தன் சுய சிந்தனைக்கு இடம் கொடாது, மற்றவர்களில் தன் வாழ்க்கையை ஒப்படைத்தல் என்ற பொருளைக் கொண்டிருக்கிறது. அதைத் தான் இங்கு கூற முயற்சித்துள்ளேன் அதாவது, தனது சுயசிந்தனையின் மூலம் பெறப்பட்ட தீர்மானங்களைச் செயற்படுத்தாது உங்களுக்குப் பதிலாக மற்றவர்கள் (பெற்றோர்கள்) எடுக்கும் தீர்மானங்களைச் செயற்படுத்துகின்றீர்கள். இது நிச்சயமாக மனிதவளர்ச்சிக்கு ஒரு பெரிய முட்டுக்கட்டை.

நீங்கள் கூறியது போன்று பெற்றோர்கள் மதிக்கப்பட வேண்டியவர்கள், வணக்கத்துக்குரியவர்கள்...அதே வேளை பெற்றோர்களின் ஆசீர்வாதத்துடன் கட்டப்பட்ட குடும்பங்கள் சீரழியவில்லையா ?...எங்கும் நன்மையும், தீமையும் கலந்து தான் இருக்கின்றன. ஆகவே, எந்த ஒரு தீர்மானமும் ஒரு தனி மனிதனால் எடுக்கப்படவேண்டும். தீர்மானம் எடுப்பதற்குப் பலர் உதவி செய்யலாம். அல்லது ஒருவன் தனது தீர்மானம் சரியா என்று அறிய உதவிகளைப் பெறலாம். ஆனால், நிச்சயமாக ஒருவன் தனது இறுதித் தீர்மானத்தைத் தானே எடுக்க வேண்டும். ஆகவே, உங்கள் சுய சிந்தனைக்கு இடம் கொடுங்கள்.

ஈற்றில், இன்னுமொரு பிரச்சினையைக் கிளப்பியுள்ளீர்கள். ''ஒவ்வொருவரும் தான் சொல்வது தான் சரி, தான் செய்வது தான் சரி என வாழத் தொடங்கினால் நாடு என்னையா ஆவது ? அதற்குப் பின் குடும்பம் எதற்கையா?'' ஒவ்வொருவனும் சரியாகச் சிந்தித்து அச்சிந்தனையின்படி சரியாகச் சென்றால், சரியாகச் செய்தால் அது சரியே ''நாங்கள் நினைத்தபடி எதுவும் செய்யலாம்'' என்று இளைஞர்கள் கூறினார்கள் என்கின்றீர்கள். அஃது ஏற்புடைய கூற்று அன்று. அஃது அவர்களது முதிர்ச்சியின்மையையே காட்டுகின்றது. நியாயமான முறையில் நினைத்த பின்னர் நிறைவேற்ற முயல்வதே முறையானது.

அன்பு நெஞ்சன் வி. பி[க்கு]

# தேசத்தொண்டு இருபாலாருக்கும் பங்குண்டு.

பள்ளிக் கூடங்களையும் கல்லூரிகளையும் விட்டு வெளிவந்ததுமே பெரும்பாலான பெண்கள் பொது வாழ்க்கையில் ஈடுபடாமல் மறைந்து விடுகிறார்கள். தேசச்சேவையும் பொதுநலத் தொண்டும் செய்வதற்கு ஆண்களே அளானவர்கள் என்ற எண்ணம் தூக்கி எறியப்படவேண்டும். அன்பும், பொறுமையும் தாய்மைக்குணமும் உடைய பெண்மணிகளே சமூக சேவை செய்ய முழுதும் பொருத்தமானவர்கள் என்று நான் திட்டமாகக்கூற விரும்புகிறேன். நன்றாகக் கல்விகற்றுத் தேறிய பின்பு அவ்வறிவை, தேசப்பணியில் உபயோகிக்கும் பெண் ஒருத்தி நாட்டின் தெய்வமென்று போற்றப்படத் தக்கவள் ஆகின்றாள். பிரான்ஸ் தேசத்தின் ''யோன் ஒவ் ஆக்'' முதலிய மேல்நாட்டுப் பெண்களும், நம் நாட்டிலே பண்டைக்காலத்தில் இலக்கியப் பணி செய்த பெண்களும், இன்று, இத்தொண்டில் ஈடுபட்டிருக்கும் பெண்மணிகளும் என் ஞாபகத்திற்கு வருகின்றனர்.

ஒவ்வொரு பெண்ணும் திருமணம் செய்து கொள்வதற்காகவே பிறக்கிறாள் என்று எண்ணுவது சரியன்று. தனிமனிதனுக்குச் சேவை செய்து கொண்டிருப்பதற்குப் பதிலாகப் பொதுவாழ்வில் ஈடுபட்டுப் பொதுச்சேவைக்கென்றே தங்கள் வாழ்க்கையை அர்ப்பணம் செய்திருக்கிற பெண்கள் அநேகரை நான் உங்களுக்குக்காட்ட முடியும். சீதையைப் போல், பார்வதியைப் போல், உயர்ந்த பெரும் புகழ்படைத்த பெண்கள் இந்தப் பெண்களிடையே தோன்றவேண்டும். அதற்கு இதுவே ஏற்ற காலம்.

சீதனம் என்ற வெறுக்கத் தகுந்த ஒரு பழக்கம் இங்கு இருந்து வருவதாகக் கேள்விப்பட்டேன். இதனால், இளம் பெண்களுக்குத் தகுந்தவரன் கிடைப்பது மிகவும சிரமமாய் இருக்கின்றது. வயது வந்த பெண்கள் சிலர், வயதானவர்களாகவே காணப்படுகிறீர்கள்.

ஆசை காட்டும் இந்தப் பழக்கத்தை எதிர்த்து நிற்க வேண்டும். இந்தக் கொடிய பழக்கத்தை எதிர்க்க நேரும் காரணத்தால் உங்களுட் சிலர் சில வருடங்கள் வரை அல்லது ஆயுள்காலம் முழுவதுமே கன்னிப்பெண்களாக இருக்க நேரிட்டாலும் நேரிடலாம். திருமணம் செய்து கொள்ளும் பருவம் வரும் போதும், அதாவது, வாழ்க்கையில் துணைவன் ஒருவன் வேண்டுமென்ற உணர்ச்சி உங்களுக்கு ஏற்படும்போது பணம், புகழ், அழகு இவற்றைத் தேடி அலையாமல், நல்லொழுக்கத்திற்கு உறுதுணையான ஒப்பற்ற குணங்கள் படைத்த ஒருவனையே நீங்கள் தேடவேண்டும்.

கருத்து அண்ணல் காந்தி
தொகுப்பு: M. ஜெராட்,
[illegible]




குடும்பம் பற்றிய கட்டுரைகளை எழுதினால் மட்டும் போதாது. எழுதுவதை வாழ வேண்டும். எழுதப்படுவதை வாழ்விற் கடைப்பிடிக்க முயல வேண்டும் என்று ஒரு நண்பர் என்னிடம் சொன்னார்.

செபிக்கவும் வேண்டும் என்ற கருத்தை நான் அவருடையதுடன் சேர்க்க விரும்புகிறேன். இம் முறை நம் திருத்தந்தை குடும்ப நலனுக்காக எழுதிய செபத்தை இங்கு தருகிறோம். செபித்து வாழுங்கள். ஒன்றாகச் செபிக்கும் குடும்பம் ஒன்றாக வாழும்.

அருள்திரு. ரூபன் மரியாம்பிள்ளை.

## செபம்

ஆண்டவரே இறைவா,
விண்ணிலும் மண்ணிலும் உள்ள
ஒவ்வொரு குடும்பமும்
உம்மிடமிருந்துதான் தன் பெயரைப்
பெறுகின்றது.
தந்தையே, நீர்தான் அன்பும் வாழ்வும்.
ஒரு பெண்ணிடமிருந்து பிறந்த
உம் திருமகன்
இயேசுக் கிறிஸ்து வழியாகவும்
அன்பின் ஊற்றாகிய தூய ஆவியின்
வழியாகவும்
இவ்வுலகததிலுள்ள ஒவ்வொரு
குடும்பமும்
தங்கள் வருங்கால சந்ததியினருக்கு
வாழ்வும் அன்பும் வழங்கும்
ஆலயமாகத் திகழ
அருள் புரிவீராக.
தங்கள் குடும்பத்தின் நலனுக்காகவும்
இவ்வுலகத்திலுள்ள மற்ற எல்லாக்
குடும்பத்தினரின்
நல்வாழ்வுக்காகவும்
கணவன் மனைவியரின்
எண்ணங்களையும் செயல்களையும்
உம் அருள் உதவி வழி நடத்துவதாக.
இளம் வயதினர் நேர்மையிலும்
அன்பிலும் வளரவும்
மனித கௌரவத்துடன் வாழவும்
தங்கள் குடும்பத்திலிருந்து
முழு ஆதரவு பெற அருள்புரியும்.
குடும்பங்களிற் சில வேளைகளில்
தோன்றும் சோதனைகளையும்
கஷ்டங்களையும், தாங்கிச் சமாளிக்க
திருமண அருட்சாதன அருள்
அதிக பலமுள்ளதாக இருக்க
உமது அன்பைப் பொழிந்தருளும்.
நசரேத்தூல் வாழ்ந்த
திருக்குடும்பத்தின் பரிந்துரையால்
திருச்சபை உலகில்
தன் அப்போஸ்தல பணியைக்
குடும்பங்களிலும்
குடும்பங்கள் வழியாகவும்
பயனுள்ள முறையிற்
செய்ய வரம் அருளும்.
வாழ்வும், உண்மையும், அன்புமான
உம்மிடம்
உமது திருமகன் வழியாகவும்,
தூய ஆவியின் வழியாகவும்
இதை அன்புடன் வேண்டுகிறோம், ஆமென்.

திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர்

## சிந்தனைகள்

1. படிப்பு எதற்கு, அறிவுக்கு. அறிவு எதற்கு? மனிதன்-மனிதத்தன்மையோடு வாழ்ந்து மற்ற மனிதனுக்கு உதவியாய்த் தொல்லை கொடுக்காதவனாய் நாணயமாய் வாழ்வதற்கு.
2. நமக்குள் ஓர் அலையோட்டம் இருக்கிறது. அது வெள்ளம் போற் புரண்டு எழும் சமயத்திற்றான் நமக்கு அதிஷ்டத்தை அள்ளிக் குவிக்கிறது.
3. கூடப்பிறந்த சகோதரன் என்பவன், இயற்கையே நமக்கு அளித்துள்ள சிறந்த நண்பன்.
4. திறக்கமுடியாத கதவுகளை அன்பு எளிதாகத் திறந்து விடுகிறது.
5. வேண்டு மென்றே வலியப்போய் நன்மை செய்வதுதான் சால்புடைமையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




திருமறைப்பணி நிலையம்
த. பெ. இல. 2,
ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.

## ஞான இலக்கிய நூல்கள் (5)

## யோபு ஆகமம்

யோபு ஆகமத்தின் ஆசிரியர் யார் என்பதற்குச் சான்றுகள் இல்லாத போதிலும், அதை எழுதியவர் மக்கள் மனத்தில் நிறைவான ஆனந்தத்தையும், அதே வேளையில் அவர்களின் மனத்தைக் குழப்பிவிட்டுச் சிந்தனையைத் தூண்டிவிடும் வல்லமையையும், ஆற்றலையும் பெற்ற புலவன் என்பது கண்கூடு. மக்களுக்கு முடிவான உண்மைகளை எளிய நடையிற் கற்பிப்பதே இவரின் நோக்கமாகும்.

நீதிமான்கூட, இறைவன்மேல் வைத்துள்ள தனது தளராத விசுவாசத்தை உறுதிப்படுத்துவதற்காக, அதற்குச் சான்று பகர்வதற்காகப் பல துன்பங்களை, இன்னல்களை வாழ்வில் எதிர்நோக்க வேண்டும். ஆனல், அவன் முழுமையான இறைவனின் சன்மானத்தை இறுதியில் அடைவான். இங்கு நாம் காணும் யோபுவின் நிகழ்ச்சியானது ஒரு கட்டுக்கதையாகத் தோன்றுகின்றது. ஆனல், ஆசிரியர் குறிப்பிடும் யோபு, பிதாப்பிதாக்கள் காலத்தில் அராபியாவின் கரையோரங்களில் வாழ்ந்த பெயர் போன மனிதர் எனப் பண்டைய பாரம்பரியம் நம்புகின்றது (எசெ. 14: 14–28)

எது எப்படித்தான் இருந்தாலும், யோபு ஆகமமானது ஞான இலக்கியக் குழுக்களின் சிறப்பான வெளிப்பாடாகவும் பெறுமதிவாய்ந்த ஆன்மீக நூலாகவும் திகழ்கின்றது. இஃது அநேகமாக, நாடுகடத்தப்பட்ட காலத்தின் பின் ஏறத்தாழ 500–400 கி. மு. ஆண்டுகளிற் பலஸ்தீன நாட்டில் எழுதப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகின்றது.

இந்த இதழில் யோபு ஆகமத்தின், ஆசிரியர், எழுதப்பட்ட இடம், திகதி, என்பனவற்றைப் பார்த்தோம். வருகின்ற இதழில் அதிற் காணப்படும் இறையியற் கருத்துக்களை ஆராய்ந்து பார்ப்போம்.

எஸ். இயூஜின் பிரான்சிஸ்

## பைபிள் மாமா

வணக்கம் மருமக்களே,

பெயர் மாற்றம் பற்றிச் சொல்வேன் என்றேன். நீங்கள் எல்லாம் குழந்தைகளாய் இருக்கும் பொழுது உங்கள் அப்பா-அம்மா-தொட்டப்பா-தொட்டம்மா எல்லாம் உங்களைக் கோவிலுக்குத் தூக்கிக் கொண்டுபோய்-சுவாமியாருக்கு முன்னல்-உங்களுக்குத் திருமுழுக்குத் தரும் போது-உங்களுக்கெல்லாம் ஒரு புதுப் பெயர் வைத்து, உங்கள் வாழ்க்கையைப் புது வாழ்வாய் மாற்றி அமையுங்கள் என்று, குரு சொல்லும் போது, உங்கள் ஞானத் தாய் தந்தை உங்களுக்காக உங்கள் விசுவாசத்திற்காக உறுதி கூறிச் சத்தியம் செய்தார்கள் இல்லையா?

அப்படியானல், நீங்கள் ஆண்டவனுக்காக ஒரு புது வாழ்வு வாழ வேண்டு மென்றுதானே அர்த்தம்?

ஏன் மருமக்களே, உங்கள் அண்ணா மார்கள்-நாட்டுக்காக-விடுதலைக்காக-போராடவென்று புறப்படும் போது அவர்கள் பெயர்களை மாற்றிப் புதுப் பெயர் வைக்கிறார்கள் இல்லையா?

அப்படிப் புதுப் பெயர் மாற்றப் பட்டபின் அவர்கள் நம் வீடுகளுக்கோ-கொண்டாட்டங்களுக்கோ-வருவது மட்டு மன்று-ஏன் உங்களைப் பார்த்தாற் சிரிப்பது கூட இல்லைத் தானே, அது ஏன்?

அவர்கள் பந்த பாசங்கள் எல்லாவற்றையும் துறந்து, தாங்கள் ஏற்றுக் கொண்ட முக்கிய இலட்சியங்களுக்காக-ஊர்-உறவு-சொந்தம்-பந்தம் எல்லாவற்றையும் விட்டு,- தங்களை அர்ப்பணிக்கப் புறப்பட்டு விட்டார்கள் என்று தானே அர்த்தம்.

தங்கள் குறிக்கோளுக்காக, உயிரைக் கூடத் தியாகம் பண்ண முன் வருகிறார்கள் இல்லையா? பெயர் மாற்றும் பொழுது வாழ்க்கையே தலை கீழாக மாற்றப்பட வேண்டும் என்பது, இப்போது மருமக்களுக்குப் புரியும் என்று நினைக்கிறேன்.

இப்படித்தான் "ஆபிரகாம்" என்ற பெயர் மாற்றப்பட்ட பின்னல், அவர்கள் என்ன மாதிரி நடந்து கொண்டார்கள் என்று தானே கேட்கிறீர்கள்.

கட்டாயம் சொல்வேன்.

அன்புடன்
பைபிள் மாமா

அறிந்து கொள்ளுங்கள் 29

## தந்திரமுள்ளவன்

யாக்கோப்பு தன் மாமன் லாபான் வீட்டிற்குச்சென்று அவரின் புதல்வியர்களைத் திருமணம் செய்து அவர்கள் வழியாகப் பன்னிரு பிள்ளைகளைப் பெற்றார். இதை ஆதியாகமம் 29, 30 ஆம் அதிகாரங்களிற் படிக்கிறோம். இவற்றைப் படிக்கும்போது பிதாப்பிதாக்கள் இப்படியான ஒழுக்கக்கேடான செயல்களைச் செய்யலாமா? அவற்றை வேதநூலில் எழுதலாமா? என்று எண்ணத்தோன்றுகிறது. இந்நிகழ்ச்சியில் மெசபடோமிய பழக்கவழக்கங்களைப் பார்க்கிறோம். பிள்ளைப்பேறுதான் அவர்களுக்கு முக்கியமானது. அத்தோடு, இஸ்ராயேல் இனம் இன்னும் ஒழுக்கத்தில் உயரவில்லை.

யாக்கோப்பு தன் வீட்டை விட்டுப் பல ஆண்டுகளாகி விட்டன. தனக்கென உடைமைகளைச் சேர்க்க விரும்பித் தந்திரம் செய்வதை ஆதி 30: 25-43 இல் பார்க்கிறோம். அப்பகுதிகளில், செம்மறிஆடு வெள்ளையாகவும், வெள்ளாடு கறுப்பாகவும் பெரும்பாலும்இருக்கும். கலப்பு நிறமுடையவை அரிதாகத் தோன்றும்.

யாக்கோப்பு மனவேகமுடையவன். கடவுளாலும் ஆசீர்வதிக்கப்பட்டவன். எனவே, கடவுள் அவனது உடைமைகளைப் பெருக்கினார் என்று தான் இப்பாரம்பரியம் கூறுகிறது.

யாக்கோப்பு இறைகட்டளைக்குப்பயந்து தனது மனைவிகளையும், பிள்ளைகளையும் அழைத்துக்கொண்டு தனக்குச் சொந்தமான உடைமைகளுடன் லாபான் வீட்டைவிட்டுப் புறப்பட்டான். இதையறிந்த லாபானும், அவன் பிள்ளைகளும் அவனைப் பின் தொடர்ந்தனர். இறைவன் லாபானை, "யாக்கோப்புக்கு எதையும் செய்யாதே" என்று எச்சரித்தார். (31: 1-24)

லாபான் யாக்கோப்பைத் தனக்குத் தெரியாது ஓடிவந்ததற்காகக் கடிந்து கொண்டான். ஆனல், தனது குல விக்கிரகத்தை யாக்கோப்பு திருடிவிட்டதாகக் குற்றம் சாட்டினன். அந்த விக்கிரகத்தை இராக்கேல் கொண்டுவந்து ஒளித்து வைத்தாள். (31: 25-35)

எத்தனை உடைமைகளையும் கொண்டு செல்ல அனுமதித்த லாபான் ஒரு விக்கிரகத்திற்காக இப்படி ஓடி வரவேண்டுமா? பபிலோனிய பழைய ஏடு ஒன்றிற் குலதெய்வ விக்கிரகத்தைப் பெறுபவனே தந்தையின் உடைமைக்கும் உரியவன் என்ற சட்டம் காணப்படுகிறது. எனவே, கணவனுக்கு மேலும் சொத்துப் பெருக வேண்டுமென்று இராக்கேல் களவாடிச் சென்றிருக்கவேண்டும்.

அக்காலச்சட்டங்களை, சம்பிரதாயங்களை அறியாவிட்டால், பழையஏற்பாட்டின் பொருளைப் புரிந்து கொள்ள முடியாது.

இ. ஜெயசீலன்




**மடல் 36:**

அன்புக்கினிய கண்மணிகாள்,

இறை யேசுவின் ஆசிகள் என்றும் உம்முள் நிறைவதாக.

காவலன் கண்மணிகள் அங்கத்துவத்தைப் பெற்றவர்கள் தங்கள் அங்கத்துவ எண்களைத் தாங்கள் அனுப்பும் ஆக்கங்களில் தவருது குறிப்பிடவும்.

அங்கத்துவத்தைப் பெருதவர்கள் எதற்காக இந்த அங்கத்துவம் என்ற வினவை எம்மிடம் கேட்கக்கூடும். உங்கள் வினவுக்கான விடை இதோ!

1. காவலனின் நிரந்தர வாசகர் என்பதை உறுதியாக்க.
2. விசுவாச வாழ்வையும், தம்மிலுள்ள அறிவாற்றல்களையும் மற்றோருடன் பகிர்ந்து கொள்ளும் உந்துதலை உருவாக்க.
3. கண்மணிக்கான போட்டிகளிற் போட்டியிட்டுப் பரிசைப் பெறும் உரிமைபெற.
4. நாட்டின் பல பாகங்களிலும் உள்ள காவலன் கண்மணிகளுடன் காவலன் கண்மணிகளாகத் தொடர்பு கொள்ள.
5. பேனமுனை வீரர்களாக, எதிர்காலத்திற் பரிமளிக்க.
6. காவலனின் வளர்ச்சியை வளமாக்கும் ஊக்கிகளாக உருவாக.

கார்த்திகையிற் போட்டிகள் ஆரம்பமாகும். போட்டிகளுக்குப் பரிசுகளும் உண்டு.

உங்கள் கடிதங்கள் 'கண்மணிகளின் கடிதம்' என்ற மகுடத்தின்கீழ்ப் பிரசுரமாகும். இம்முறை கண்மணி யூடின் கடிதத்தைத் தருகிறேன், படியுங்கள். படிப்பதுடன் நின்றுவிடாது 'காவலன் கண்மணிகள்' பற்றிய உங்கள் எண்ணத்தை எழுதி அனுப்புங்கள். உங்கள் கடிதங்கள் காணக்காத்திருக்கும்,

அன்பின்
அன்பு விழி.

★ ★ ★

**கண்மணிகள் கடிதம்:**

அர்ச். மரியாள் பேராலயம்
பதுளை.

கிறிஸ்துவில் பிரியமுள்ள விழி.
அண்ணா/அக்கா அவர்கட்கு
அநேக வந்தனங்கள்.

காவலன் கண்மணிகளில் நானும் ஒரு கண்மணியாவதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைவதுடன் உங்களுக்கு நன்றியும் கூறுகிறேன்.

அங்கத்துவக் கண்மணிகளுக்கு, இன்னும் ஒளியூட்டு முகமாக ஓரிரு போட்டிகள் வைத்தாலென்ன? (பரிசுக்காக அன்று) நாங்களும் ஏதேனும் எழுதி அனுப்பலாமா? நீங்கள் அண்ணா விழியா? அல்லது அக்கா விழியா? குறை நினைக்காவிடிற் குறிப்பிடுங்கள். காவலன் வளர, கருணையுடன் நேசயேசு அருள்புரிய வாழ்த்தி விடை பெறும்,

அன்புக் கண்மணி
N. யூட்

★ ★ ★

**கணிதம்:** படிமுறை 3 இன் தொடர்ச்சி
மாற்றல் அலகுகள் சில.

நீளவளவை

| | |
|---|---|
| 1 சென்ரி மீற்றர் | = 0·4 அங்குலம் |
| 1 மீற்றர் | = 39 அங்குலம் |
| 1 மீற்றர் | = 1·1 யார் |
| 1 கிலோமீற்றர் | = $\frac{5}{8}$ மைல் |
| | = 0·625 மைல் |

நிறுத்தலளவை

| | |
|---|---|
| 1 கிராம் | = 0·04 அவுன்ஸ் |
| 1 கிலோ கிராம் | = 2·2 இறுத்தல் |
| 1 மெட்ரிக்தொன் | = 0·98 தொன் |
| 1 கரட் | = $\frac{1}{5}$ கிராம் |

அடுத்து வருவது எண் கோலங்கள் படிக்கத் தவருதீர்.

★ ★

நொடிப் பொழுது நொடி: விடைகள்
(1) விளக்கு (2) தேங்காய் (3) வாழையிலை
(4) எள்ளு (5) முட்டை

**துன்பம்:**

துன்பத்திற்கு இருபக்கங்கள் உண்டு. ஒன்று நம் உடலை வருத்தும்; புலன்களைப் பொசுக்கும். சுயமனதைச்சுடும்; செருக்கைக் கிளறும்; தற்கொலை செய்யத்தூண்டும்.

மறுபக்கம்:

நம் மனத்தைத் தூய்மைப்படுத்தும்;
உள்ளத்திற்கு உறுதி அளிக்கும்.
இறைவனிடம் நம்பிக்கையை வளர்க்கும்.
தாழ்ச்சியின் தேவையை உணர்த்தும்.
வாழ்க்கையை வளப்படுத்தும்.-

"படிப்பினை" அடுத்த வாரம் வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேதாகம வினுவிடைப் போட்டி — 13

விடைகளை மாத்திரம் தபால் அட்டையில், தெளிவாக எழுதி உங்கள் பெயர், முகவரியுடன் 25-10-87ஆம் திகதிக்கு முன் பாதுகாவலன், த. பெ. இல. 2, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள். பரிசு ரூ. 15/=, விடையும், பரிசுபெறுபவர் பெயரும், அடுத்த போட்டியும் 13-11-87இல் வெளிவரும்.

## விஞக்கள்

1. யோசுவாவின் தந்தையின் பெயர் என்ன?
2. யோசுவா எந்த நகரை வேவுபார்க்க ஒற்றர் இருவரை அனுப்பினுர்?
3. ஆண்டவர் மோயீசனோடு இருந்தது போல், யோசுவாவோடும் இருக்கிறுர் என்று காட்ட என்ன அடையாளம் கொடுத்தார்?
4. வீரர் கூட்டம் எவ்வாறு இஸ்ராயேல் மக்கள்முன் சென்றது?
5. இஸ்ராயேல் மக்களுக்கு ஆண்டவர் செய்த செயல்களைக் கண்டு அஞ்சிய அரசர்கள் யாவர்?
6. மன்னு பொழிவது ஏன் நின்றது?

விடைகளை யோசுவா ஆகமத்திற் காணலாம்.

### போட்டி 12. சரியான விடைகள்

1. எலியாசு. 2. மோயீசனிடம். 3. ஆண்டவருக்கு. 4. குடியேறி வாழும் அந்நியருக்கு. 5. அக்களிப்பு. 6. யோபு.

# வேதாகம வினுவிடைப் போட்டி— 12

## சரியானவிடைகள் எழுதியோர்

1. அமிர்தநாதன் செல்வராணி, 'ரேசா வாசா', சுன்ஞகம்.
2. இ. சுபாஜினி, இராமநாதபுரம், கிளிநொச்சி.
3. வெ. யூஜின், புனிதவளன் அ.ம.தி. குருமடம், கொழும்புத்துறை.
4. லீ. பொலின் நிர்மலா, இராமநாதபுரம், கிளிநொச்சி.
5. லீ. அன்ரன் வுளோரு, இராமநாதபுரம், கிளிநொச்சி.
6. ம. மினேர்வா, 7/4, நாலாம் குறுக்குவீதி, குருநகர், யாழ்.
7. யே. ஜெயவதி, 7/3, 4ஆம் குறுக்குவீதி, குருநகர், யாழ்.
8. M. அஞ்சலா மரியேன், வட்டாரம்-13, நெடுந்தீவு.
9. M. S. றீசா ஆன்மேரி வட்டாரம்-13, நெடுந்தீவு.
10. அ. கின்சன், H.F. தொடர்மாடி, யாழ்ப்பாணம்.
11. யோ. மரிய இரஷிக்கா, நுகவில், கரவெட்டி.
12. M. ஜெனேவா, வட்டாரம்-13, நெடுந்தீவு.
13. அ. நிக்சன் சோசை, வட்டாரம் 2, வங்காலை.
14. அ. தேவருஜன் லெம்பேட், வட்டாரம் 2, வங்காலை.
15. யோ. யேசுதாசன் லெம்பேட், வட்டாரம்-2, வங்காலை.
16. அ. தேவநாதன் லெம்பேட், வட்டாரம்-2, வங்காலை.
17. அ. டோரு சோசை, வட்டாரம்-2, வங்காலை.
18. அ. தேவகி லெம்பேட், வட்டாரம்-2, வங்காலை.
19. இ. அன்ரனி ஜெரோம், ஊறணி, காங்கேசன்துறை.
20. ஷியாமா அகஸ்ரின், 7, 4ஆம் குறுக்குத்தெரு, யாழ்.
21. இ. யோசப் மக்சிமஸ், ஊறணி, காங்கேசன்துறை.
22. சு. செல்வி, இல. B. 6, தொடர்மாடி, குருநகர், யாழ்.

### பரிசுபெறும் நற்பேருளர்

அ. நிக்சன் சோசை, வட்டாரம்-2, வங்காலை.

---

பண்டத்தரிப்பு

## பத்திமா அன்னையின் திருக்காட்சி விழா

ஐப்பசி 13ஆம் திகதி செவ்வாய்க்கிழமை திரிதின ஆராதனைகள்.

10ஆம் திகதி மாலை 6மணிக்குத் திருச்செபமாலை, திருப்பலி.
11ஆம் திகதி மாலை 6மணிக்குத் திருச்செபமாலை, திருப்பலி.
12ஆம் திகதி மாலை 6மணிக்குத் திருச்செபமாலை, திருப்பலி.
13ஆம் திகதி காலை 5-30 முதல் திருப்பலி.
6-00 பொதுச்செபமாலை.
6-30 திருநாள் திருப்பலி.

யுத்தகால அனர்த்தங்களிலிருந்து காத்த அன்னைக்கும் அவள் திருமகனுருக்கும் அவள் திருப்பதியில் நன்றிகூறுவோம்.

பங்குத்தந்தை
பண்டத்தரிப்பு

A/130

---

## "எம் கருத்து" குறள் தெளிவுரை

ஒருசெயலை, முடிக்கும்வகையும், அதனுல் வரக்கூடிய இடையூறும், செயல்முடிந்தபோது கிடைக்கும் பயனும் ஆராய்ந்தே செய்தல்வேண்டும்.




அக்டோபர் 14

**புனித கலிஸ்ரஸ். பாப்பு, வேதசாட்சி கி. பி. 223.**

சிறு வயதில் அடிமையாக வாழ்ந்தவர், பாப்புவாக உயர்த்தப் பெற்ற காலத்தில், கிறிஸ்துவின் இறைத் தன்மையையும் திரித்துவத்தின் நன்மையையும் எதிர்த்தவர்களுடன் போராடினுர். 222 ஆம் ஆண்டில் உரோமையில் எழுந்த கலகம் ஒன்றிற் கொல்லப்பட்டார். நாமும் இப்புனிதரைப் பின்பற்றி இறை விசுவாசத்தில் வளர முயலுவோமாக.

அக்டோபர் 15

**புனிதை அவிலா தெரேசம்மாள் 1515 — 1582**

1515 ஆம் ஆண்டில் ஸ்பெயின் நாட்டில் அவிலா நகரிற் பிறந்தாள். 12 வயதில் தாயை இழந்த பின் 18 வயதில் கார்மேல் மடம் புகுந்து முன்னேறிஞள். இவள் எழுதிய ஞான நூல்களின் அடிப்படையில் இவளுக்கு "மறைவல்லுநர்" பட்டம் அளிக்கப்பட்டது. இறைவனை நாம் நேசித்து உறவு கொள்வது நமக்குள் நாம், ஒருவர் ஒருவருடன் உரையாடுவது போல உரையாடுவது ஆகும், என்னும் புனிதையின் வழியைப் பின்பற்ற முயலுவோமாக.

அக்டோபர் 16

**புனித அலகோக் மார்கரித்து மரியம்மாள் 1647 — 1690**

பிரான்ஸ் நாட்டில் ஆற்றென் மறை மாவட்டத்தில் உள்ள

(தொடர்ச்சி 8ஆம் பக்கம்)

---

## 6ஆம் வருட நினைவஞ்சலி

திருமதி சிசிலியம்மா
(செபமாலை)

தோற்றம்: 4-6-1920 மறைவு: 15-10-1981

நெஞ்சத்தின் நினைவலைகள்
அன்பின் இருப்பிடமே
ஆபத்தில் ஆறுதலே
அரவணைக்கும் கரத்தவளே
ஆகாரம் தந்தவளே
எங்கள் எல்லோருக்கும்
எல்லாமாய்த் திகழ்ந்தவளே
எங்களைத் தவிக்கவிட்டு
எங்குதான் சென்றுயோ?

உத்தானமும் உயிரும் நானே என்றுரைத்த யேசுவே, உமது அன்பின்பாதையில் வாழ்ந்து இவ்வுலகை விட்டகன்ற இவரின் ஆன்மாவை அமைதியும் இன்பமும் நிலவும் மோட்ச வீட்டில் ஏற்றருள வேண்டுகிறோம்.

முல்லைத்தீவு சம்பேதுருவானவர் ஆலயத்தில் இவரது ஆன்ம சாந்திக்காக 15-10-87 வியாழக்கிமை காலை திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்,

பிரிவின் துயரில்: தேவசித்தத்தை ஏற்கும்,
கணவன், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
அன்னை வேளாங்கண்ணி
சதுக்கம்,
முல்லைத்தீவு. A/131

---

# மறைபரப்பு ஞாயிறு 18-10-87
# சாட்சியம் எங்கே?

*இசை. 2:1-5, உரோ. 10:9-18, மாற்கு. 16:15-20.*

ருசிய தேசத்து முதியவர் ஒருவர் நெப்போலியனது வீரர்களாற் கைது செய்யப்பட்டார். பழுக்கக் காய்ச்சிய இரும்பால் இவரது உள்ளங்கையில் "N" என்று பொறித்துவிட்டு "இனி நீ நெப்போலியனின் ஆள்" என்றனர் அவ்வீரர்கள். ஆத்திரமடைந்த கிழவன் தன் முன் கையைத் துண்டாகவெட்டித் தன் மறு கையால் அதை வீரர்கள் முன் தூக்கி எறிந்தான். இந்தக் கை மட்டும் நெப்போலியனுக்குச் சொந்தம் நானே ரஷியாவுக்கே சொந்தம். இஃது அவனது தேச பக்தியின் சாட்சியம். மண்மீது அவனுக்கிருந்த பற்று. இதற்குக்கொஞ்சம் துணிவு வேண்டும்; கொஞ்சம் தியாகமும் வேண்டும்.

இந்நாள்களில் நாட்டுப்பத்தி, மொழிப்பற்று, வீரவழிபாடுகள் பற்றிப் பேசப்படுகின்றன. இதனுல் 'தியாகிகள்' பெருகுகின்றனர். ஆனுலும், கிறிஸ்துவின் பெயரைச் சூடியவர்கள், கிறிஸ்துவுக்காகத் தம்மை அர்ப்பணித்தவர்கள் பேரளவிலேயே நின்றுவிடுகின்றனர். பல தடவைகளிற் பெயருக்கு இழுக்கும் கொணருகின்றனர்.

யேசுக்கிறிஸ்து, ஆண்டவர் என அறிக்கையிடுவோர் மீட்புப்பெறுவர் எனப் புனித சின்னப்பர் மொழிகின்றுர். ஆதலாற்றுன், யேசுவிடமிருந்து எந்தச்சக்தியும் தன்னைப்பிரிக்க முடியாது எனக் கூறுகின்றுர்.

கிறிஸ்துவை உள்ளத்தால் ஏற்றுக் கொண்டவர் மகாத்மாகாந்தி. கிறிஸ்துவின் போதனையால் ஊட்டம் பெற்ற இவர், கிறிஸ்துவர்களின் நடத்தையில் அதிருப்தி கொண்டார்.

அன்று, கடல் கடந்து நாட்டைவிட்டுத் தூரதேசம் சென்றனர் மறைபரப்பாளர்கள். இன்று எமது மறைபரப்புப் பயணத்தில் நாம் செய்யும் தியாகம் தான் என்ன? அந்நிய மொழி, அந்நிய கலாசாரம் பழக்கப்படாத காலநிலை, அனைத்தையும் சமாளித்துக்கொண்டனர் முற்காலத்து மறைபரப்பாளர்கள்.

இன்று பணம், திருமணம், தொழில், அந்தஸ்து என்றால் மறையையே மறந்து போய்விடுகின்றோமே. மக்களினங்கள் யாவருக்கும் ஆண்டவனின் குரல் கேட்க வேண்டுமென இசையாஸ் கனவு காண்கின்றுர். யூதன் என்றே, கிரேக்கன் என்றே பாகுபாடின்றி எல்லா இனங்களையும் நற்செய்தி சென்றடைய வேண்டுமென்று புனித சின்னப்பர் விரும்புகின்றுர். கிறிஸ்து இனம், மதம், மொழி, குலம், கலாசாரம் அனைத்தையும் கடந்தவர். யாம் பெற்ற விசுவாச செல்வத்தை ஏனையவரோடு பகிர்ந்துகொள்ள எமது பங்களிப்புத்தான் என்ன?

பாரெங்கும் சென்று தூதுரைக்க, யேசு எம்மை அனுப்புகின்றுர். இருளில் ஒளியாய் ஒளிரவேண்டியவர்கள் ஒளிந்து நிற்கின்றோம். உண்மை, நீதி, அன்பு, சமாதானம், அகிம்சை போன்ற நற்செய்தியின் விழுமியங்களைப் பரப்பத் துணிவற்றவராய் மறைந்து வாழ விரும்புகின்றோம். ஒளியை மரக்காலின் கீழ் வைப்பது நல்லதில்லையன்றோ?

கிறிஸ்து, தந்தைக்குச் சாட்சியாய் வந்தார். அதற்காகத் தம் உயிரை முதலாய்த் துச்சமாய் மதித்தார். கிறிஸ்துமீது கொண்டிருந்த பக்திக்குச் சான்றுபகர வேதசாட்சிகள், புனிதர்கள், மறைவல்லுனர்கள், மறைபரப்பு மூதாதையர்கள் தம் வாழ்வையே பணயமாக்கினர். குடும்பம் ஒரு குட்டித்திருச்சபை, அங்குதான் மறைபரப்பு முதலில் ஆரம்பமாக வேண்டும். இப்பணி உலகிலுள்ள எல்லா அமைப்புக்களையும் ஊடுருவி, மூலை முடுக்குகளிலும் பரவி ஆக்கிரமிக்க வேண்டும். அன்றுடம் ஆண்டவனுல் அன்புடன் அனுப்பப்படும் நாம், போதனையில் மட்டுமல்லர் பேரளவில் மட்டுமல்லர், வாழ்க்கையிற் சாட்சியம் பகரத் துணிந்திடுவோம். வாழ்வே சாட்சியமாகட்டும்.

சுவாமி ஜீவா போல்
அ. ம. தி

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி. பேள் றெஜீனு அகஸ்தீன்
விண்ணில்: 15-10-1986

"சீவியத்தில் நேசித்தவர்களே மரணத்தில் மறவாதீர்கள்"

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 15-10-87 வியாழக்கிழமை, யாழ்ப்பாணம், பாண்டியன்தாழ்வு புனித அன்னம்மாள் ஆலயத்தில், காலை 6-20 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

இத்திருப்பலியிற் பங்குபற்றி இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக வேண்டுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இவரின் பிரிவால் துயருறும்:
கணவன், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், தாய், சகோதரர்.
7, விதானை ஒழுங்கை,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம். A/129

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

19—10—87

செல்வன்
றெஜினேல்ட் ஸ்ரீபன்

மண்ணிற்கு மலர்ந்தாய் 26-6-1972
விண்ணிற்கு விரைந்தாய் 18-09-1987

"மண்ணுலகில் அன்பு செய்தோம்
விண்ணுலகிலும் உனை மறவோம்"

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 19-10-1987 திங்கட்கிழமை காலை 7-00 மணிக்கு சூரிய கட்டைக்காடு, புனித செபஸ்தியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

பிரிவால் துயருறும்:
அன்புப் பெற்றோர், சகோதரர் சகோதரிகள், உறவினர்கள்.
சூரிய கட்டைக்காடு,
நானுட்டான். A/132

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாவலன்
PATHUKAVALAN

# 232 'ஆயர் பேரவை' ஆயர்க்கு 85கோடி மக்கள் தலைவர் உரை

கத்தோலிக்கத் திருச்சபையிற் பொதுநிலையினரின் பங்கு, பணிகள் குறித்து விவாதிக்கவும், பொது நிலையினருக்குத் திருச்சபையியில் வழங்கப்பட வேண்டிய இடங் குறித்துத் திருத்தந்தைக்கு ஆலோசனைகள் கூறவும், 1-10-87 வியாழக்கிழமை வத்திக்கான் நகரில் 'ஆயர்கள் பேரவை' தொடங்கிற்று. உலகெங்கிலிருந்தும், ஆயர்களின் பேராளர்கள் 232 பேர் வத்திக்கானில் இதற்கெனத் திரண்டிருந்தனர். பேரவைக் கூட்டத்தைத் தொடங்கி வைத்த 2ஆம் அருள் சின்னப்பர் பொது நிலையினர் மீது தாம் கொண்டிருக்கும் மிகுந்த மரியாதையைப் பிரகடனம் செய்தார். 85 கோடி மக்கள் பின்பற்றும் சமயமான கத்தோலிக்கச் சமயத்தில் துறவறம் ஏற்காதவர்கள் பொது நிலையினர் எனப்படுவர்.

''பொது நிலையினர், திருச்சபையில், குருக்களுக்கும், கன்னியர்களுக்கும் தாழ்வானவர்கள் என்று கருதக்கூடாது'' என்று திருத்தந்தை ஆயர்கள் பேரவையிடம் கூறினார். ''பொது நிலையினர் குறித்து எந்தெந்தக் கட்டுக்கள் அவிழ்க்கப்படட்டும், என்பதற்காகவே ஆயர்கள் பேரவை கூட்டப்பட்டிருக்கிறது'' என்றார் திருத்தந்தை. ''வேறுவிதமாகச் சிந்திப்பதும், வேறுவிதமாகச் செயற்படுவதும் கடினமானவை தாம். ஆனால், யாரையும் தாழ்வாக நினையாமல், 'எல்லோரும் நமது மேலோரே' என்ற எண்ணத்தோடு செயற்படத்தான் நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். பொது நிலையினருக்குத் திருச்சபையின் நலன் கருதி வழங்கப்பட்டுள்ள எல்லாக் கொடைகளுக்காகவும் இறைவனுக்கு நன்றி கூறுகின்றோம். இந்தக் கொடைகள் முழுமையாக உயரவேண்டும். அவற்றின் முழுமையான கனிகளை நாம் பெறவேண்டும் என்பதே இப் பேரவையின் எதிர்பார்ப்பு'' என்று திருத்தந்தை சொன்னார்.

ஆயர்களும், கருதினால்களும், திருத்தந்தையுடன் புனித இராயப்பர் பேராலயத்தில் திருப்பலி நிகழ்த்திப் பேரவைக் கூட்டத்தைத் தொடக்கினர். திருப்பலியின்போது, மறை வாசகங்களைப் பெண்கள் இருவர் வாசித்தனர். பேரவையின் நடவடிக்கைகளில், திருச்சபையிற் பெண்களுக்குத் தரப்படவேண்டிய இடங் குறித்தும் பெரிதும் விவாதிக்கப்படவிருக்கிறது. திருச்சபையிற் பெண்கள் முழுமையாகப் பங்கேற்க வேண்டுமென்பதில் தாம் அக்கறை செலுத்துவதாக அண்மையில் அமெரிக்காவிற்குச் சென்றிருந்தபோது திருத்தந்தை கூறினார்.

கிறிஸ்தவ திருச்சபையைச் சேர்ந்த பொதுநிலையினர் அரசியல் வாழ்வில் முழுமையாக அக்கறை கொண்டு செயற்பட வேண்டும் என்ற எண்ணமும் 'ஆயர்கள் பேரவை' க்காக வத்திக்கானிற் குழுமியிருக்கும் ஆயர்கள் மத்தியில் எழும்பியிருக்கிறது.

## சிலாபத்தில் நூற்றுண்டு விழா திரிதினக் கொண்டாட்டம்

சிலாபத்தில், செப்டெம்பர் முதல் வார இறுதி நாள்களில் நடைபெற்ற யோசேவ்வாஸ் முனிவரின் மூன்றும் நூற்றுண்டுத் திரிதினக் கொண்டாட்டங்களில், அவரது ஞாபகச் சின்னமாக விளங்கும் யோசவ்வாஸ் கல்லூரி முக்கிய பங்கை வகித்தது, இதற்குச் சிலாப மேற்றிராசனத்தைச் சேர்ந்த சுமார் 15,000 கத்தோலிக்க மக்களும், குருக்களும், கன்னியர்களும் பங்குபற்றியிருந்தனர்.

பேராயர் அம்புறேஸ் டி பவுல்லி, பிரதம விருந்தினராகப் பங்குபற்றினர். அவர் தமதுரையில், யோசவ் வாஸ் முனிவர் விசுவாசத்திற்குச் சாட்சியாக விளங்கி, அப்போஸ்தலப்பணி புரிந்த இந்த நாட்டில் அவரை மேன்மைப் படுத்துவதன் முக்கியத்தை எடுத்துரைத்தார். சிலாப ஆயர் பிராங் மார்க்கஸ் பெர்ஞன்டோ தமதுரையில், வண. யோசவ்வாஸ் அடிகள் இலங்கையின் பெரிய அப்போஸ்தலர் ஆவார் என்றும், நம் முன்னேடியாகிய அவரின் விசுவாச அர்ப்பண வாழ்வை நாம் கண்டு பாவிக்க வேண்டும் என்றும் எடுத்துரைத்தார்.

2ஆம் நாள் கொண்டாட்டங்கள் பொது நிலையினருக்காக ஒதுக்கப்பட்டிருந்தன. குருநாகல் ஆயர், றேமன்ட் பீரிஸ் ஆண்டகை தலைமை தாங்கினர். அவர் தமதுரையில், திருச்சபையிற் பொது நிலையினரின் பணியின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். பொது நிலையினரை 2ஆம் வத்திக்கான் சங்க ஏடுகளை ஆழமாகப் படிக்கும்படியும், அதிற் பொது நிலையினருக்குரிய அப்போஸ்தலப் பணிக்குரிய அழைப்பையும் ஏற்றுக் கொள்ளும் படியும் கேட்டுக் கொண்டார். அவர் மேலும், வண. யோசவ்வாஸ் அடிகள், பொது நிலையினருக்கு உரிய இடத்தை வழங்குவதற்கு, அவர் எடுத்த முயற்சிகளையும் பாராட்டினர். அவரது பின்னணியையும் மொழியையும் நாம் பாராது, கோவில் அலங்கரிப்பது, காணிக்கை சேர்ப்பது போன்றவற்றேடு மட்டுமல்லாமல், அதற்கும் மேலாக அநீதி, இலஞ்ச ஊழல் முதலியன நிறைந்த இவ்வுலகத்திற்குப் புளிக்காரமாக, சரியான பாதையில் வாழ்வது பொது நிலையினரின் முக்கியமான பணியாகும் எனவும் எடுத்துரைத்தார்.

மூன்றும் நாள், பிரதமவிருந்தினர் கண்டி ஆயர் வியான்னி வெர்ஞன்டோ, குருக்கள், துறவிகள், சந்நியாசிகள் முதலானேருக்குரிய தமதுரையில், திறமைகள், புலமைகளைவிட, அர்ப்பணிப்பின் முக்கியத்துவமே பெரிதென வலியுறுத்தினர். மேலும், கிறிஸ்துவுக்காகத் தம்மை முழுமையாக அர்ப்பணித்த அடிகளாரைக் கண்டு பாவிக்க வேண்டுமென்றும், இறை பக்தி, அர்ப்பணிப்பு போன்றவற்றிற்கு அவரை ஒரு முன்மாதிரியாகக்கொள்ள வேண்டுமென்றும் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டார்.

வண. W. L. A. டொன் பீற்றர் தமது விஷேச உரையில், இலங்கையில் அப்போஸ்தலப் பணி புரிந்த யோசவ்வாஸ் அடிகள், தமது வாழ்வில், சாதி, மத, இன வேறுபாடுகளின்றிச் சேவைபுரிந்தார் என்றார்.

## புனிதர் வழியில்......

(7ஆம் பக்கத்தொடர்ச்சி)

லோத்கூர்ட்டில் 1647 ஆம் ஆண்டு பிறந்தாள். 24வது வயதில் மினவுதல் கன்னியர் சபையிற் சேர்ந்து அருள் வாழ்விற் சிறந்தோங்கினள். திருச்சபையின் வாழ்வில் திரு இருதயப் பக்தியைப் புகுத்துவதற்காக அரும்பாடுபட்டாள். 43வது வயதில் இறைவனடி சேர்ந்தாள். அறிவு அளவுக்கு மீறி முதிர்ச்சி அடைந்துவிட்டது போன்ற ஒரு மனநிலையுள்ள இன்றைய காலத்தில், இறைவனைத் தவிர வேறென்றும் எனக்குத் தேவையில்லை என்ற புனிதையின் வழிகாட்டலைப் பின்பற்ற முயலுவோமாக.

அக்டோபர் 17

**புனித அந்தியோக்கியா இஞ்ஞாசியார் ஆயர் வேதசாட்சி கி. பி 107.**

அந்தியோக்கியா நகரின் ஆயரான இவர், கிறிஸ்து, திருச்சபையின் அமைப்பு, கிறிஸ்தவ வாழ்வு பற்றிய மடல்களை எழுதினர். திவ்விய நற்கருணையில் இறைவனின் இருப்பைப்பற்றிப் போதித்தார். 107 ஆம் ஆண்டிற் சிங்கங்களின் உணவாக ஆக்கப்பட்டு வேதசாட்சியாக மரித்தார். யேசுக்கிறிஸ்துவுக்குப் பணிவது போல் ஆயர்களுக்கு எப்பொழுதும் பணிந்து நடக்கத் தூண்டும் இவரின் வழியை நாமும் பின்பற்ற முயலுவோமாக.

அ. றெபேட்
குருத்துவக் கல்லூரி,
கொழும்புத்துறை.

## மறையாசிரியருக்குப் பாராட்டு

மேற்கு வங்காளத்திலுள்ள கிறிஷ்நகர் மறைமாவட்டத்தைச் சேர்ந்த மறையாசிரியர்களுக்கு ஜுலை 1-ம் திகதி முதல் 31-ம் திகதி வரை சேவைக் காலப் பயிற்சியொன்று நடைபெற்றது.

பயிற்சி முடிவில் சகல மறையாசிரியர்களும் 38 ஆண்டுகள் சேவை புரிந்த மூத்த மறையாசிரியர்கள் திரு அலெக்சான்டர் சீர்க்காருக்குப் பாராட்டு வைபவம் நடத்தினர். இவரது சேவையின் விளைவாக சாப்ராபங்கில் இருமறைத் தளங்கள் நிறுவப்பட்டன.

## மக்கள் குரல்

எங்கள் பங்கு இப்போது உயர்ந்து நிற்கக் காரணர் எங்கள் பங்குக்கு வந்த அருள்திரு செபஸ்ரியன் அடிகள். அவரைத் தாளையடிப் பங்குக்கு மாற்றி விட்டு இப்போது எமது பங்குக்கு அருள்திரு ஜெரூட் அடிகள் வந்ததும் எமது பங்கு இன்னும் மேலாக உயர்ந்தது. இப்போது வழிபாடு மக்களின் மனத்தை ஒன்று படுத்தி, அவர்களைச் செப வழிபாட்டிற் பக்தியுடன் செபிக்க வழிவகுக்கிறது. வீட்டுக்குள் முடங்கிக் கிடந்த கிறிஸ்தவ மக்கள் அனைவரும் கோவில், கோவில் என்று ஓடிஓடிப் போவதும் எமது பங்கின் முன்னேற்றமேயாகும். பாதுகாவலன் என்றால் என்னவென்று தெரியாது இருந்த எமது பரந்தன் மக்கள், இப்போது கிழமைக்கு ஒரு பாதுகாவலன் எடுக்காமல் இருப்பதில்லை.

எங்களைப் பயிலவைத்த எமது ஓம்லோ அடிகளுக்கும் நாம் என்றென்றும் நன்றியுடையவர்கள்.

அ. ஞானமலர்
குமரபுரம், பரத்தன்

நகர்ப் புறங்களிலும், கிராமங்களிலும், உள்ள சகல நூல் நிலையங்களிலும், அவை எச் சமயத்தைச் சேர்ந்தவர்களால் நிர்வகிக்கப்பட்டு வந்தாலும், அவற்றைப் பொருட்படுத்தாது பிரதி வாரமும் அவ்வூர் மக்கள் பாதுகாவலன் பிரதி ஒன்றை அங்கு இலவசமாகக் கொடுக்க முன்வரவேண்டும்.

இந்த நன் முயற்சியை நாம் செயற்படுத்துவோமானல், ஏனைய சமயத்தைச் சேர்ந்தவர்களும் கிறிஸ்துவின் மகிமை, கிறிஸ்தவ கோட்பாடுகளை அறிய வாய்ப்பினை ஏற்படுத்த முடியுமல்லவா?

''இதனுல் நாம் கிறிஸ்துவை உலகத்திற்கு அளிக்கவும், உலகத்தைக் கிறிஸ்துவிற்கு அளிக்கவும் முடியும்.

இதைச் செயற்படுத்த தயங்காமல் முன் வருவோமாக.

வ. அ. இம்மானுவேல்
ஊறணி
காங்கேசன் துறை.

## கிறிஸ்தவ சமயம் க. பொ. த. (உ. த.) போட்டிக்குரிய வினுக்கள் இரட்சணிய வரலாறு

1. பஞ்சாகமத்தின் தோற்றப் பின்னணியையும் அதன் உள்ளடக்க முரண்பாடுகளையும் விளக்குக. (9-10-87)
2. ஆதியாகமத்தின் முதல் 11 அதிகாரங்களிலும் காணப்படும் இறைவெளிப்பாடுகளை விளக்குக. (16-10-87)
3. ஆபிரகாம் இறைவனின் நண்பனுய் இருந்தபோதும், குறைகள் உள்ளவராயும் காணப்பட்டார். இக்கூற்றை உதாரணங்களுடன் ஆராய்க. (23-10-87)
4. மீட்பின் வரலாற்றிலே, ஈசாக் கொண்டுள்ள பங்கை விளக்குக. (30-10-87)
5. 'யாக்கோப்பின் வாழ்விலே, இறைபராமரிப்புச் சிறப்பான விதத்திற் காணப்படுகிறது.' உதாரணங்களுடன் விளக்குக. (6-11-87)

சிறந்தவிடைக்குப் பரிசு ரூபா 50-00

விடைகளை அனுப்பவேண்டிய இறுதிநாள் வினுவுடன் தரப்பட்டுள்ளது. சரியான விடையும், பரிசுபெறுவோர் பெயரும் 30-10-87 முதற் பாதுகாவலனில் வெளிவரும். ஆசிரியர் தவிர்ந்த எவரும் போட்டியிற் பங்கு பற்றலாம். விடைகளை அனுப்பும் தபால் உறையின் மேல் மூலையில், கிறிஸ்தவ சமயம் க. பொ. த. (உ. த.) போட்டிக்குரிய விடை என எழுதி, வினு இலக்கத்தையும், குறிப்பிட்டு 'பாதுகாவலன்,' அ. பெ. இல. 2 யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

இப்பத்திரிகை திரு. நீக்கிலஸ் யேமஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1987-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 9ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

உன்னை மீட்கவும் விடுவிக்கவும் நாம் உன்னேடிருக்கிறேம் என்கிறர் ஆண்டவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org